# உள்ளம்

சித்திரை 2001
கதிர் 01
விலை 25/=




சிறப்பு மலர்

வளர்மதி வெளியீடு

கலை இலக்கிய சமூக இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ESWARRAN TRADERS

General Merchants, Commission Agents,
Transport Agents, Bicycle,
Bicycle Spare Parts & Hardwares.

Prop. T. THUVARAKEESHWARAN

**69, Kasthuriyar Road. Jaffna.**

Tel- 021-2813 Fax- 021-2813


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கை

# இராஜகோபால் கங்கேசன் (கங்கு)

(கழக முன்னாள் பொருளாளர்)

மண்ணிலே மைந்தனாய் 11-01-1981



விண்ணிலே அமரனாய் 24-05-1999

வளர்மதியின் நிகழ்வுகளில் – நீ
சுமைதாங்கிய நினைவுகள்
கூடியிருந்த நிகழ்வுகள் – நாம்
கூடிச்செய்த குறும்புகள்

இவை எண்ணிப்பார்க்கையிலே – எம்
விழியோரம் நீர்ருவி பாய்கிறது
உன் நினைவுகள எம் வாழ்வில் – நிதம்
பூக்கும் புதுமலர்கள்.

மீண்டும் உலாவருகின்ற 'உள்ளம்' சிறப்பு மலரினை
கங்கேசா உன்கழலில் காணிக்கையாக்குகின்றோம்.

என்றும் உன் நினைவுகள்
எம் உள்ள(ம்) மெலாம் நிறைந்திருக்கும்

**உன் வளர்மதி நண்பர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை நிறப் பூவுமல்ல;
வேறெந்த மலருமல்ல;
உள்ளக் கமலமடி;
உத்தமனார் வேண்டுவது.

கதிர் :- 01

# உள்ளத்திலிருந்து......

'உள்ளம் பெரும் கோவில் ஊனுடம்பு ஆலயம்' என்ற முன்னோர் வாக்கிற்கமைய அகம், புறம் என்ற இருநிலையின் அறிவுத்தேடலின் பொருட்டு அகத்தை முதன்மைப்படுத்தி அதாவது உள்ளத்தை முதன்மைப்படுத்தி அறிவை எழுத்தாகத்திரித்து வாசகர்களிற்கு அறிவு ஒளியூட்டப் பிறந்ததுவே உள்ளம் சஞ்சிகை.

## பின்னோக்கி: . . . .

விளையாட்டு விளையாட்டாக ஆரம்பித்த கழகம் இளைஞர் முன்னேற்றக் கழகமாகி அத்துடன் வாசிகசாலையும் ஆரம்பமாகி வளர்மதி என்று நாமம் பெற்று வளர்ந்து வருகையில் பல சாதனைகளைப் படைத்தது. இதில் உள்ளம் சஞ்சிகையின் பங்களிப்பு காத்திரமானது அதாவது 1975-76ம் ஆண்டு காலப் பகுதியில் எமது கழக மூத்த அங்கத்தவர்களால் கையெழுத்துப் பிரதியாக வெளிவந்த உள்ளம் சஞ்சிகை சில தவிர்க்க இயலாத காரணங்களால் தடைப் பட்டு பின்னர் மீண்டும் 1989ம் ஆண்டிலிருந்து மாதாமாதம் வெளிவந்தது. இடையே உள்ளம் சில காரணங்களால் வெளிவராமல் போனது. இருப்பினும்-

## மீண்டும்:-

இளைஞர்களின் விடாமுயற்சியால் மீண்டும் இவ் உள்ளம் மலர் ஒரு சிறப்பு மலராக மலர்கின்றது.

வாசகர்களின் காத்திரமான பங்களிப்பினைப் பொறுத்து உள்ளம் சஞ்சிகை காலாண்டுக் கதிராக உருவெடுக்க இருக்கின்றது என்பதனை உங்களிற்கு உவகையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். — வணக்கம்

— ஆசிரியர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கத்தைப் போக்கி எழுக!

- அனலையூர்ச் சேந்தன் -

பல்குழலின் ஒலியினிலே பதறிமனம் ஓடி
பாரிலுள்ள மூலையெலாம் பதுங்கினரெம் தமிழர்!
செல்சுழலும் ஓசையிலே சிந்தையெலாம் வாடி
செகத்திலுள்ள ஊரையெல்லாம் சென்றடைந்தார் தமிழர்!
அல்லலதன் கெடுபிடிக்கு அகல இடம் தேடி
அங்குமிங்கும் ஓடியவெம் தமிழரெலாம் இன்று
எல்லையிலா இன்பமதை எய்துகிறா ரென்றே
எண்ணியிங்கு ஏங்குபவர் இதனையுமே அறிக!

வெள்ளையரின் வீம்புகளை வேற்றினத்தார் வம்புகளை
விஞ்சியொரு வேலையினைப் பெற்றபின்னு முடலை
சுள்ளெனவே எரித்துவிடும் சூரியனின் கதிரும்
சூக்குமமாய் நரம்பையெலாம் சுண்டிவிடும் குளிரும்
அள்ளியொரு செல்வமதை அளித்ததுவே யென்றால்
அதனிலிலும் இங்ஙனுப்பி எஞ்சுவது எல்லாம்
கொள்ளையதாய் போனதமிழ்ப் பண்பாடும் மொழியும்
குலமழிந்த வாழ்க்கையுந்தான் என்பதனை அறிக!

சொல்லுதமிழ் தேசமதைச் சொர்க்கமென எண்ணி
சுந்தரமாய் இங்குபலர் வாழ்வரென நம்பி
இல்லையடா! இப்படியோர் இனியவரெம் என்றே
ஏங்கிமனம் வாடுகின்ற அப்புலத்தார் தினமும்
சொல்லவொணாத் துன்பதில் சுகமெதுவும் இன்றி
சுதந்திரந்தன் சுருதியதன் சுரமிழந்து போக
எல்லையிலா இன்னலிலே இங்குதமிழ் வாடும்
ஏற்றமிலா இயல்பினையும் இயன்றவரை அறிக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளை விட்டோமெம் உரிமைகளை விட்டோம்
உயிரதுவும் மயிரிழையில் ஊசலென ஆட
பிறப்பதனின் பெருமையினைப் பேசமனம் விடுத்து
பிறகிங்கே இறப்பிற்காய் பெருவிழாக்க ளெடுத்து
மறக்கவொண்ணா ரணத்தினையே மனதினிலே தாங்கி
மரணத்தின் அடிமைகளாய் மனிதமதும் மரித்து
இறக்கமுடன் எம்மினமும் ஏதிலியாய் எங்கும்
இயலாது நொந்தழுது இருப்பதுதான் விதியோ?

நெஞ்சினிலே நேர்மையுடன் நெருப்பணலாய் ஓர்மமுடன்
நீதியதன் நெறிமுறைகள் நித்தம் வழுவாது
அஞ்சேலென எழுந்துபெரு அலையெனவே தமிழரெலாம்
அணிதிரண்டு வந்துவிடின் ஆறிடுமே துயரம்!
விஞ்சுபுகழ் தமிழன்னை விருப்புடனே முறுவலிக்க
வெற்றியதன் முரசொலிக்க வையகமே ஆர்ப்பரிக்க
மிஞ்சியினிப் தமிழதனின் மேன்மையினை யெய்திவிடும்
மிடியில்லை; மனதினிலே உறுதியெடு தமிழா!

★

---

நிறைய நல்ல செய்கைகளைச் செய்து வரும்போது தான் நட்பு உறுதியாகிறது. ஆனால் அவசரப்பட்டுச் செய்யும் ஒரு செயலால் அது அழிந்துவிடுகிறது.

— பேட்டன் ஹில்ஸ்

எதைச் சிந்திக்கிறாய் என்பதல்ல,
எப்படி சிந்திக்கிறாய் என்பதில்தான்
புதிய கருத்துகள்
வெளிவருகின்றன.

---



நிருபர்:- உங்கள் கட்சியினுடைய கொள்கைகள் என்னவென்று விபரியுங்களேன்.

கட்சித்தலைவர்:- இப்படி மொட்டையாகக் கேட்கிறீர்களே எந்தக் காலபகுதி என்பதைக் குறிப்பாகச் சொன்னால் பழைய டைரிகளைப் பார்த்துச் சொல்லுவேன்.

— மிஸ்டர் சிரிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**- சிறுகதை -**

# காலமெலாம் காத்திருப்பேன்



காலை ஆறு மணி கடிகாரம் இனிய பெண் குரலில் வீடு முழுவதும் 'குட் மோர்னிங்' சொல்லி 10-01-2006 என்ற இன்றைய திகதியைச் சொல்லி அனைவரையும் துயிலெழுப்பியது மன்னிக்கவும் என்னை மட்டும் துயிலெழுப்பியது ஏனெனில் எனக்கு முன்பே அனைவரும் எழுந்து விட்டார்கள். வீடு முழுவதும் ஒரே இரைச்சலாக இருந்தது ஓகோ வீடு சுத்தம் செய்கிறார்கள் போலும் ஆமாம் பொங்கல் வருகிறதல்லவா அது தான் வீட்டினைச் சுத்தம் செய்கிறார்கள். எனக்கும் அலுப்புத்தரப் போகிறார்களோ என்று எண்ணிக் கொண்டிருக்கையில் அம்மாவின் குரல்.

“கபிலன்! இன்னும் என்ன செய்கிறாய் பொங்கல் வருகிறது வீடு கிளீனிங் நடக்குது உன்ர அறையை நீ கிளீன் பண்ணிறியோ இல்லை நான் செய்யிறதோ?’’

கடவுளே அம்மா என்ர அறையைச் சுத்தஞ்செய்யிறதா? வேண்டாம் வேண்டாம் கிளீன் பண்ண வந்தாவோ என்ர நடிகைகளின், மொடல்களின் போஸ்ரர்கள் சீ. டி (CD) கள், புளொப்பிகள் எல்லாம் குப்பை என்று கூறி வெளியேற்றிவிடுவா அவசர நடவடிக்கை வேண்டும்.

“வேண்டாமம்மா நானே கிளீன் பண்ணிறன்’’ மிக அவசரமாக அம்மாவினை வெளியேற்றினேன். வக்கியும் கிளீனரையும வெயிலிலே வைதது விட்டு காலைச் செய்திகளை நெற்வேர்க்கில் பார்ப்போமென்று என்ர ஐ. பி. எம் (IBM) கணணியை உயிர்ப்பூட்ட வந்தது தகவல் “you have a mail’’ யாரப்பா mail இல் எனக்கு letter போடுவது எதுக்கும் பார்ப்போமன்று ok பண்ணிப்பார்த்தேன் அடக்கடவுளே அது சுகன்யாவின் கடிதம் உடனே லேசர் பிரிண்டரை உயிர்ப்பூட்டி விட்டு ஒரு பிரிண்டிங் பேப்பரை செலுத்தி விட்டு மீண்டும் வக்கியும் கிளீனரிடம் சென்றேன்.

இராசசுந்தரம் முரளீதரன்

வெயிலில் வைத்ததால் கதிரவன் கதிர்களை சோலர் கலங்கள் மூலம் வாங்கி கட்மி ம் பற்றரிகள் உயிர்ப்பாகியிருந்தன. அறையினை கிளீன் பண்ணினாலும் என் எண்ண அலைகள் எங்கோ கடந்த நூற்றாண்டிலே டழைய நினைவுகளை இரை மீட்கத் தொடங்கியது

அன்றைய ஏன் இன்றைய இசைப் புயல் ரகுமானின் இசையில் பாட்டுகள் அதிர்ந்து கொண்டிருந்தது. இளைஞர் கூட்டத்தில் நானுமொருவனாய் அலங்கரிப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன் ஆம் அது வைஷ்ணவி அக்காவினுடைய திருமண வீடு. எல்லோருக்கும் அவரவர் விருப்பிகேற்ப தேனீர் கோப்பி, குளிர்பானங்கள் என வழங்கி உபசரித்துக்கொண்டிருக்கும் பெண்கள் கூட்டத்தில் அவளும் ஒருத்தி ஆம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தான் சுகன்யா அன்று தான் அவளை முதன்முதலில் சந்தித்தேன். நான் அவளை சந்தித்தது ஏன்? சந்தித்தால் சந்தித்து விட்டுப் போகட்டுமேன் ஏன் அவளை நிதமும் சிந்தித்தேன்? இன்று வரை என்னால் விடை காண முடியாத புதிராகவே இருந்து வருகிறது.

அவளைக் கண்ணுற்றதும் ஏனோ காதல் வந்து விட்டது உடலில் பல இரசாயண மாற்றங்கள் உள்ளக்கிடங்கை நண்பன் சங்கரிடம் சொன்னபோதுதான் சொன்னான் ''கபிலன் விட்டிடாதை, உவளுக்கு நானறிய யாருமில்லை நல்ல ச .....'' என்று எம் தற்கால இளைஞர் மொழியிலே விமர்சித்து உற்சாகமாய் உருவேற்றி விட்டான்.

வேதனை, என் உடலெல்லாம் வேதனை, ஆனால் அது ஒரு சுகமான துன்பம் என்பது எனபோன்றவர்க்குத் தான் தெரியும். ஒரு நாளுக்கு நாலு தடவையாவது அவளைப் பார்க்காது இருந்ததில்லை, இதற்காக நாற்பது தடைவைகளுக்கு மேலாவது அவள் வீட்டடியால் போகவேண்டும் என்பதும் அவள் ரியூசன் ரைம்ரேபிள் எல்லாம் படிப்பிக்கும் வாத்தியார் மறந்தாலும் நான் மறக்காது வெளிக்கிட்டு பாதையில் திரியவேண்டும் என்பதும் காதலித்தவர்க்கு மட்டும் புரியக்கூடிய விடயம்.

இதன் விளைவாக நல்ல சில வேலைகளும் என்னால் செய்யமுடிந்தது. வீட்டிற்காய் கடைக்குப்போய் சாமான் வாங்கி வருவேன். வாசிகசாலைக்கு காலையில் பேப்பர் கூட எடுத்துப் போடுவேன். ஏன்? எதற்காக? என்னவள் வீடு கடைக்குப்போகும் பாதையில் அல்லவா இருக்கின்றது.

காலை மாலை என அலைந்தேன். ஏனென்றால் காலமெலாம் அவளுடன் வாழ்வதற்காய் கற்பனை கொண்டு வாழ்வில் வரப்போகும் கோலங்களை என்றும் புதிதாய்க் கட்டியிருந்தேன். கனவில் அவளுடன் பாட்டுகள் பலவும் பாடியிருப்பேன் சினிமாவைப் போல ஆனால் நிஜத்தில் நிழலாய் என்னுடன் இருந்தவன் அவள் மனதில் குடி புகுந்தான்.

---

கந்தையா:- தம்பி நிமல்! இப்ப என்னடாப்பா செய்யிறாய்.

நிமல்:- இப்ப நான் ஹாட் வெயர் படிக்கிறன்

கந்தையா:- எடமவனே இரும்புக் கடையில நிக்கவும் படிக்க வேணுமா?

நிமல்:- இல்ல கந்தையா அண்ண நான் கம்பியூட்டர் ஹட்வெயர் படிக்கிறன்.

— பிரசாத்

---

'அபிலாஷ்' அன்பானவன், என் நண்பனானவனும் கூட எங்கள் 'செற்' இல் அவனும் ஒருவன் அவன் இயல்புகளால் எம்மை விட வித்தியாசமானவன்.

ஆண்மை என்றால் இது தான். ஆண் என்றால் சிகரட் குடிக்க வேண்டும், தண்ணியடிக்க வேண்டும் கடையில் ஒரு பெண்ணையாவது 'லவ்' பண்ணிறதாகச் சொல்லி பின்னால் திரிய வேண்டும் இவ்வாறு செய்யாதவர்கள் உடற்கூறில் ஆணாயிருப்பினும் பெண்களாகவே வர்ணிக்கப்படுவார்கள். இவ்வாறு ஆணுக்கு வரைவிலக்கணம் கொடுத்த எம்முடன், எம் கணிப்பில் பெண்ணாகவிருந்தவன். எம்மைவிட உறுதியானவன், காதலில் கால்வைக்கும் போது உறுதியாகப்பதிப்பவன், ஒரு பெண்ணிடம் தன் காதலைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி அவள் மனதை வெல்லக் கூடியவன் என்பதும் நாமெலாம் வெறும் வாய்ச்சொல் வீரர் என்பதும் சுகன்யா அபிலாஷ் மீது காதல் கொள் கிறாள் என்ற போது தான் உணர்ந் தோம்.

நான் சுகன்யாவைக் காதலிக்கவில் லையா? காதலித்தேன் எவ்வாறு காதலித்தேன்? என் நண்பர்களிடம் நான் ஒரு ஹீரோவாக இருக்க, அவர் களின் உருவேற்றலில் அன்று ஆடிய காதல் கூத்து அது உணர்ந்தாலும் என்மனது அவளிடம் பறிபோனது

ஆனால் ஒரு பெண்ணிடம் என் காதலைச் சொல்வது எப்படி என்று தெரியவில்லை அவளிடம் சென்ற போது என் நா எள மறுத்தது, கால் கள் நடனமாடின, அப்போது தான் உணர்ந்தேன் நாலுபேர் கூட இருந் தால் தான் என் துணிவு என்னிடம் வரும் என்ற உண்மையை எனினும் திக்கு வாயனாய், தட்டுத்தடுமாறி என் காதலை அவளிடம் கூறி முடித் தேன்.

''கபிலன் அயம்சொறி, அபி என்னை விரும்பிறார், நானும் அவரை ....'' மீதி அவள் சொன்னாளோ இல் லையோ என் காது வாங்கவுமில்லை, மூளை உணரவுமில்லை. 'அபிலாஷ்' என்ற பெயரினை அபி என்று சுருக் கிச் சொல்லும் அளவிற்கு அவர்கள் காதல் வளர்ந்திருந்தது. எனினும் என் பேதை மனது மீண்டும் உந்தியதன் பிரகாரம் என் ஆசைகளை விண்ணப் பங்களாய்ப் போட்டேன் அவைய னைத்தும் கட்சிகள் அடிக்கடி விடும் அறிக்கைகள் போல யார் மனதிலும் சொறி அவள் மனதில் ஏறவில்லை.

காலங்கள் ஓடின லண்டனில் படித் துக் கொண்டிருந்த போது தான் எனக்கு இந்த எண்ணம் உதித்தது. உடனே செயல்படுத்துவதற்காய் விடு முறையில் ஊருக்கு வந்தேன்.

அப்போதும் அபிலாஷ் சுகன்யா காதல் திருமணத்தில் முடியவில்லை. கல்வி கற்றுக்கொண்டிருந்தார்கள். என் எண்ணத்தை சுகன்யாவை மீண் டும் சந்தித்துக் கூறினேன் திகைத்து விட்டாள்.

நானொன்றும் காதலிப்பதாகக் கூற வுமில்லை கூறுவதும் முறையல்லத் தானே என்றாலும் எனது இந்த ஆசையைக் கூறினேன்.

அவள் திகைப்பு எனக்கு விளங்கியது ஆனால் இன்றைய உலகிலே இது வெல்லாம் சகஜம் சர்வசாதாரணம் என்ற படியால் தான் நான் கேட் டேன். என்னால் இதை விட்டுக் கொடுக்க இயலவில்லை. இடம் கொடுக்கா விட்டால், பலவந்தமாயே னும் பறித்து விடுவது என்று முடிவு செய்தேன். ஆனால் என் ஆவல், ஆசை, தீவிரம், மனம் பேதலித்த நிலை காரணமாக என் ஆசைக்குப் பணிந்தாள் சுகன்யா, நிபந்தனையு டன்.

இப்போதெல்லாம் நான் சுகன்யா விற்கு தொல்லை கொடுப்பதில்லை எனது படிப்பு மட்டுமல்ல சுகன்யா – அபிலாஷ் படிப்பும் ஏன் திருமணம் கூட நடந்து முடிந்து விட்டது நான் கூட திருமணத்திற்குச் சென்றிருந் தேன். என் திருமணத்திற்குச் சிறிது காலமிருக்கிறது காதல் தோல்வி யால் நான் பிரம்மச்சாரியாக வாழ்ந்து விடமாட்டேன். என்னவள் வளரும் வரை காத்திருப்பேன்.

சுகன்யா போட்ட நிபந்தனை, என் திருமணம் என்னூரில் நடக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது, வாழ்க்கையும் வெளிநாட்டிலேயே இருக்க வேண்டும். இரு சுகன்யாக்கள் ஒரே ஊரிலிருப்பது நல்லதல்ல தானே எனக்கும் சரியெனவே பட்டது.

சுகன்யாவிடம் இருந்து பெற்ற பத்து உடல் கலங்களில் ஒன்று உயிராய், என் சுகன்யாவாய் ''குளோனிங்கில்'' உருவாகி லண்டனில் ஓமோன் சிகிச்சை மூலம் மிக விரைவாய் வளர்ந்து கொண்டிருக்கிறாள். அவள் தகுந்த பருவமடையும் வரை காத்திருப்பேன். காலமெலாம் காத்திருப்பேன் அந்த நாள் வெகு தூரமில்லை. அவளது அதாவது என் குளோன் சுகன்யாவின் கடிதம் தான் ஈமெயிலில் வந்து பிரிண்டாகிக் கொண்டிருக்கிறது.

''யாவும் கற்பனை''

♣

## கலைஞன்

கடவுளெனும் பைத்தியக்காரன்
படைத்து வைத்த ஆக்கங்கள் பல
அதில் துலங்கும் அற்புதங்களோ
பற்பல வண்ணத்திப் பூச்சிக்கு
வர்ணம் தீட்டினான்
கண்ணுகருத் தெரியாத
எத்தனையோ
அற்புதங்களை செய்து வைத்
தான்
பாவம் படைத்தவனென பரிந்து
தன்வேலை மினக்கெட்டு
அதைப் பார்த்து இரசிப்பவனே
கலைஞன்

- பாலன்

பணக்கார அம்மணி:- எங்கையாலும் என்ர அவரை கண்டனீங்களே! என்னும் அவர் சாப்பிடெல்லை,

கேட்டுக்கொண்டிருந்தவர்:- பாத்தியேடா அவ எவ்வளவு தன்ரை புரிசனிலை பாசமாய் இருக்கிறா!

மற்றவர்:- அட நீ ஒண்டு, இன்றைக்கு ஒரு கலியான வீடு அதில சாப்பிடத்தான்.

- ஜெயா

## தத்துவஞானி சோக்ரடீஸ் சொன்னார் . . .

கல்யாணம் செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு நல்ல மனைவி கிடைத்தால், உங்களுக்குச் சந்தோசம் நிறைந்த வாழ்க்கை கிட்டும்; மோசமான மனைவி அமைந்தால் நீங்கள் தத்துவஞானியாக உருவெடுப்பீர்கள். அதனால் மனித இனம் பயன்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் காய்ச்சல்

டெங்கு காய்ச்சல் எனும் உயிர் குடிக்கும் நோயின் தாக்கம் பற்றிய விழிப்புணர்ச்சி யாழ்ப்பாணத்தில் போதியளவு ஏற்படவில்லை. இந்நோய் யாழ்ப்பாணத்தில் இல்லை என்ற தப்பபிப்பிராயங்கள் மக்களிடையே பரவியிருக்கின்றமையே இதன் முக்கிய காரணமாகும். இவ்வகையில் நோயின் தாக்கம் பற்றியும் யாழ்ப்பாணத்தில் இந்நோயின் பரம்பல் பற்றியும் கொக்குவில் பகுதி சுகாதார அதிகாரி திரு A. S. சிவபாலன் அவர்களினால் வரையப்பட்ட இக்கட்ரை மக்களின் தப்பபிரபயங்களைத் தீர்த்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் உள்ளம் இதழினை அலங்கரிக்கின்றது.

- ஆ - ர்

*A. S.* சிவபாலன் P-H-I (Kokuvil)

சுகாதார பரிசோதகர் கொக்குவில்.

தென் இலங்கையில் 40க்குப் மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்டிருக்கும் டெங்குக்காய்ச்சல் குடாநாட்டிலும் பரவ ஆரம்பித்துள்ளது. குடாநாட்டில் இதுவரை 07 நோயாளிகள் குருதிப்பெருக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சல் (Suspected Dengue Haemo rrhagic Fever) அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் ஒரு நோயாளி பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்குப்பகுதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்[illegible]க்கதாகும்.

எனவே இத்தருணத்தில் நாம் அ[illegible] வரும் டெங்குக்காய்ச்சல் பரவும்முறை, அதன் அறிகுறிகள், தடுப்பு முறைகள் பற்றியும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

## பரவும் முறை (*Mode of Transmission*)

டெங்குக்காய்ச்சல் வைரஸ் கிருமியால் Arbo Virus ஏற்படும் நோயாகும். இந்த வைரஸ் ஈடிஸ் எஜிப்ரை (*Aedes aegypt*) ஈடிஸ்அல்போபிக்ரஸ் (*Aebes albopictus*) போன்ற நுளம்பினங்களால் பரப்பப்படுகின்ற போதிலும், ஈடிஸ் எஜிப்ரை நுளம்பே முக்கியமாகப்பரப்புகிறது. இந்த நுளம்புகள் யாழ்குடாநாட்டிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றினுடைய கால்களிலும், உடலிலும் கறுப்பு நிறப் பின்னணியில் வெண்ணிறக்கோடுகளைக் கொண்டிருப்பதால் இவற்றைப் புலிநுளம்புகள் (Tig r m squitos) என அழைக்கப்படுகின்றன.

இந்த நுளம்புகள் சாதாரணமாகப் பகலில் (காலை 6–8 மணி, மாலை 4–7 மணி) மனிதரைக்கடிக்கும். நுளம்பானது நோயுள்ள ஒருவரைக்கடித்துக் குருதியை உறிஞ்சும் போது வைரஸ் கிருமியை உள்ளெடுத்துப்பின், சுகதேகி ஒருவரைக் கடிக்கும் போது டெங்குவைரசை உட்செலுத்தி நோயைப் பரப்புகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயரும்பு காலமும், நோயின் முக்கியத்துவமும்

டெங்குவைரஸ் ஒருவருக்குத் தொற்றியதிலிருந்து நோய் ஏற்பட ஏறக்குறைய 4-6 நாட்கள் எடுக்கும். டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படும் எல்லோருக்கும் நோய் அறிகுறிகள் வெளிக்காட்டப்படுவதில்லை (Asymptomatic cases) என்பதுடன், நோய் அறிகுறிகள் வெளிக்காட்டப்படும் நோயாளிகள் (Symptomatic cases) எல்லோருக்கும் டெங்குக் காய்ச்சலிற்குரிய விஷேட அறிகுறிகள் காணப்படுவதில்லை (Undifferentiated fever)

பிடிசுரம், சாதாரண வைரஸ்காய்ச்சல் (Normal virus Fever) (Influenza) சின்னமுத்து (Measles) மலேரியா, செங்கமாரி (Hepatitis) மற்றும் ஆரம்பநிலையிலுள்ள வேறுவகையான காய்ச்சல் நிலைகளிலிருந்து வேறுபடுத்த முடியாமல் இருக்கலாம். ஆகையால் ஒரு வைத்தியரிடம் ஆலோசனை பெறுவது மிகவும் ஆவசியமாகும்.

மேலும் குருதி வெளியேற்றத்துடன் வரும் டெங்குக்காய்ச்சலானது (Dengue Haemorrhagic Fever) மிகவும் ஆபத்தானது இதனுடைய அறிகுறிகள் தென்பட்டதும் தகுந்தமுறையில் சிகிச்சை எடுக்காவிட்டால் உயிராபத்து ஏற்படலாம்.

## நோயின் பொதுவான குறிகள்

நோயின் பொதுவான அறிகுறிகளாக காய்ச்சல், தலையிடி, கண்ணிற்குப் பின்னான நோ, தசைநார்மூட்டுக்களில் நோ, உடலின் பல இடங்களில் தோலின் கீழ் சிவந்த புள்ளிகள், இனிப்பு, புளிப்பு வித்தியாசம் காண முடியாத நிலையில் நாக்கும் அத்துடன் பசியின்மையும், ஓங்காலம், சத்தி காணப்படுதல் என்பன இருக்கும்.

சில வேளைகளில் பாரிய அறிகுறிகளாக மூக்கால் குருதி வெளியேறல் முரசால் குருதி வெளியேறல் குடல் வழிப்பாதையில் குருதி வெளியேறல் (இந்நிலையில் சத்தி எடுப்பின் கோப்பி நிறமாகவும், மலத்துடன் தார் நிறம்/ கறுப்பு நிறமாகவும், குருதி வெளியேறும்) சிறு நீர் மூலம் குருதி வெளியேறல், பெண்களில் மாதவிடாயின் போது கூடுதலாகக் குருதி வெளியேறல் ஆகியன காணப்படும். இந்நிலை குருதிப்பெருக்குடன் கூடிய டெங்குக்காய்ச்சலாக (Dengue Haemorrhagic Fever) கருதப்படும்.

தொடர்ந்து காய்ச்சல் 3-7 நாட்களின் பின்வருவன காணப்படலாம்.

---

காதல்

காதல் என்பது கல்யாண
வாயிலை அடைவிற்கும்
அற்புத வாகனம் – இது
வாயில்தாண்டி வசந்தமெனும்
வாழ்வில் தடையின்றி ஓட
தரமாக இருக்க வேண்டும்

தரன்

---

குளிர்ந்த நிலையில் உடல் காணப்படுவம், வியர்வை காணப்படுவதும், வாயைச்சுற்றி நீலநிறமாதல், பதகளிப்பும், குழப்பமான நிலையும் ஏற்படல், பலவீனமான விரைவான நாடித் துடிப்பு தொடர்ந்து மயக்கநிலை/ கோமா நிலையடைதல். இந்நிலை டெங்கு அதிர்ச்சி நிலை (Dengue Shock Syndrome) எனப்படும். இந்நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிர மருத்துவ சிகிச்சை அளிக்கப் படாவிட்டால் 12-24 மணித்தியாலத் திற்குள் நோயாளி இறக்கும் அபாயம் உண்டு.

## நோயாளி பராமரிப்பு

எனவே மேற்கூறிய அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்திய உதவியை நாடுதல் வேண்டும் மேலும் நோயாளிக்குப பூரண ஓய்வு கொடுத் தல், நோயாளியைத் தனிமைப்படுத தல் (நோயினால் பீடிக்கப்பட்ட வரை நுளம்பு வலைக்குள் / பாதுகாப்பான அறைக்குள் தனிமைப்படுத்துவதன் மூலமே நோய் பரவாது தடுக்கலாம்) இலகுவில் சமிபாடடையும் போசாக கான உணவு கொடுத்தல, வைத்திய ஆலோசனையின்றி மருந்துகள் எடுப் பதைக் தவிர்த்தல (உ+ம்: அஸ்பிரின், டிஸ்பிரின்) ஆகியன நோயாளி பரா மரிப்பில் முக்கியமான விடயங்களா கும்.

## தடுப்பு முறைகள்

### *I*) நுளம்புக் கட்டுப்பாடு




நிறைவுடலி நுளம்பானது நீர்நிலை களில் முட்டைகளை இடுகிறது. எனவே நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழித்தொழித்தல் மிகவும் பிரதான மான கட்டுப்பாட்டு முறையாகும். ஆகவே பின்வரும் நீர் தேங்குமிடங் களில் நீர் தேங்காதவாறு முறையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். நீர் தேங்கும் சிறுகுட்டைகள், மூடப் படாது நீர் சேகரிக்குமிடங்கள், வீட் டிற்கு வெளியே வீசப்பட்டிருக்கும் பாத்திரங்கள், ரின்கள், பானைகள், சட்டிகள், சிரட்டைகள், கோம்பை கள், ரயர்கள், நீருள்ள பூச்சாடிகள, மழை நீர் தேங்கியுள்ள தாழ்வார பீலிகள், மேசையில எறும்புகள் வராது தடுக்க மேசைக்கால்களுக்கு வைக்கப் படும நீருள்ள பாத்திரங்கள (உப்பு நீர் பாவிக்கலாம), நீர் நிறைந்த மரப பொந்துகள், கறபாறைவயாட்டை கள் போன்றனவாகும்.

---

கொள்கை என்பது
வாய்வீச்சல்ல
எழுதிககாட்டும்
எழுத்தோவியமும் அல்ல
எத்தகைய இடர் வரினும்,
தாங்கிக்கொள்ளும்
மனத் துணிவோடு கூடிய
சிந்தனையின்
இறுதி முடிவு.

— பிரிட்ஜஸ்

---

மேலும் வளர்ந்த நுளம்புகள் பற் றைகளில் தங்குவதாலும், பறக்கும் தூரம் மிகவும் குறுகியதாலும் (100m–200m) வீடுகளிலிருந்து 500m சுற்ற ளவில் பற்றைகளை அழித்தல் வேண் டும் என்பதுடன் குப்பை கூளங்களை புகைத்தல் / எரித்தல், ஆட்களற்ற அயல்வீடுகள், வெற்றுக்காணிகளைத் துப்பரவு செய்வதன் மூலமும் வளர்ந்த நுளம்புகளைக் கட்டுப்படுத்த முடியும்

### *ii*) தனிநபர் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

நுளம்புவலை, நுளம்புச்சுருள், புல் எண்ணெய் ஆகியன பாவித்தல், மூல

மும் வீடுகளின் யன்னல் கதவுகளிற்கு நுளம்புகள் புகமுடியாதவாறு வலை அடித்தல் மூலமும், நுளம்புகள் பற்றைகளில் தங்குவதாலும், காலை, மாலை நேரங்களில கூடுதலாகக் கடிக்கும் என்பதாலும் (காலை 6-8 மணி, மாலை 4-7 மணி) இந்நேரங்களில் வெளியில் நிற்பதை முடிந்தளவிற்குத் தவிர்த்தல் மூலமும் (நீளமான உடைகள், காலுறைகளை அணியலாம்) தனிநபர் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

## நாங்கள் செய்ய வேண்டியது

டெங்குக்காய்ச்சல் நோய் ஒருவருக்கு ஏற்படின் அதனைக் குணப்படுத்தக் கூடிய நுண்ணுயிர்க்கொல்லிகள் (Antibiotics) இல்லை மேலும் இந்த நோயை ஏற்படுத்தும் வைரஸ் 4 பிரிவுகளாக (Serotypes) இருப்பதால் இந்த நோயினால் பாதிக்கப்படும் ஒருவர் மீண்டும், மீண்டும் நோயாளியாக மாறக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. எனவே டெங்குக்காய்ச்சலை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரப்பும் நோய்க்காவியான நுளம்பின் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துவதன் மூலமே இந்த நோயை சமூகத்திலிருந்து முற்று முழுதாகத் தடுக்கமுடியும்.

எனவே கிராமங்கள் தோறும் உள்ள சனசமூகநிலையங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், பாடசாலைகள், ஆகியன அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே எமது பிரதேசங்களிலுள்ள நுளம்பை ஒழித்து டெங்குக்காய்ச்சல் பரவாது தடுக்கலாம்.

''நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்''

## சுருக்கக் குறியீடுகளின் விரிவாக்கங்கள்

1) AIDS Acquired Immune Deficiency Syndrome
2) B P Blood Pressure
3) CD Compact Disk
4) DNA Deoxyribo - Nucleic Acid
5) EMIL Electronic Mailing
6) FM Frequency Modulation
7) GMT Greenwich Mean Time
8) HIV Human Immunodeficiency Virus
9) IBM International Business Machines
10) JAL Japan Airlines

வாசமுள்ள மலருக்காய் வண்டு சிறகடித்துச் - சிறு
பயன்தானுமில்லை மலரில் அமுதில்லாவிடத்து.

விளக்கம்:- அழகானவள் என்று அலைந்துதிரிந்து பயனேதுமில்லை நண்பா!
அவள் மனதில் பாசமும் அன்பும் இல்லாவிடத்து.

இ. மு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியலை நோக்கி...

அம்மாவின் கர்ப்பத்தில்
அரைகுறையாய் அவதரித்தும்
பின்னாளில் தாயறியா
சேயென்னும் நோயாகி
பிறந்ததும் பிதாவின்
பரமகிழ்வை நான் பார்த்தும்
ஊரெல்லாம் பெண்பிள்ளை
நானென்று கூறியதும்
உலகெல்லாம் என் தாயை
உறவெல்லாம் திட்டியதும்
கனவாகிப் போவதற்குள்
கறையான்கள் புற்றெழுப்பி
கரைத்துக் கொண்டதும்
உறவெல்லாம் உண்மைகளில்
உறைந்து போனதுவும்
நினைவில்லா நாட்களாய்
மறைந்துவிட்ட என் வாழ்வில்
மனமெங்கும் நெருஞ்சி முட்கள்
நெருடுகையில் வரும் துயரம்
பெண்ணாய் பிறந்ததும் நான்
ஏன் பிறந்தேன் என எண்ணி
மண்ணாய்ப் போய்விடவே
மனமெங்கும் எண்ணங்கள்
மத்தாப்புச் சிதறல்களாய்
சிதறுகின்ற வேளையிலும்
நனவெங்கும் என் உளமும்
பெண்மை வாழ்கவென
பென்னம் பெரிதாக பேருவகை
கொண்டு நிதம்
கன்னங்கரிய இருள் விலகிடவே
விலங்குதனை உடைத்தெறிந்து
வானமதில் விடியலை நோக்கி
நான் விரைந்து செல்கிறேன்.

- நர்மதா

## சின்னஞ்சிறு தகவல்கள்

1) சமாதானத்தின் சின்னமாக வெண்புறாவை அமைத்தவர் ''புதுமுறை ஓவியத்தின் தந்தை'' என்று சிறப்பிக்கப்படும் திரு பபிலோ பிக்காஷோ ஆவார்.

2) மகாத்மா காந்தியின் சுயசரிதையைக் கூறும் நூல் ''சத்திய சோதனை''. ஹிட்லரின் சுயசரிதையைக் கூறும் நூல் 'மெயின்காம்ப்' (main camp)

3) கண்தெரியாதவர் எழுத வாசிக்கக் கற்றுக் கொள்ளக்கூடிய எழுத்து முறையை ஆக்கியவர் லூயி பிரேய்ஸ் ஆவார்.

4) முகப்பவுடர் தயாரிக்கப் பயன்படும் டல்க் (talc) என்ற இரசாயணத்தின் இரசாயணப்பெயர் மக்னீசியம் றை (tri மூன்று) சிலிக்கேற்.

5) உணவு இல்லாமல் பாம்பு 25 மாதங்களும் தவளை 16 மாதங்களும் மூட்டுப்பூச்சி 6 மாதங்களும் உயிர் வாழக்கூடியன.

6) மிருகங்களுள் மிகச்சிறிய இதயமுள்ளது சிங்கம் ஆகும்.

7) சிகரெட் பழக்கத்தை மறக்கத் தரப்படும் மாத்திரை லோப்லைன் சல்பைட்டைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

8) கழுத்தை முழுவட்டப் பாதையில் சுற்றும் தன்மைகொண்ட ஒரே உயிரினம் ஆந்தை

9) மாடுகளினது வயது அதன் பற்களின் எண்ணிக்கையினைக்கொண்டு கணிக்கப்படுகிறது

10) மனித உடலில் வியர்க்காத பகுதி உதடு ஆகும். நாயில் வியர்வை நாக்கு மூலம் வெளியேற்றப்படுகிறது.

தொகுப்பு:- பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல கதை தான்...

★ சிறுகதை ★

அது ஒரு கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டு அறிமுகவிழா எங்கள் ஊர் கிராம முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர். நானும் சென்றிருந்தேன்.

''தம்பி நீங்களும் வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது.

குரல் கேட்டுத் திரும்பினேன். எங்கள் பகுதி கிராம சேவை அலுவலர். எந்த ஒரு நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொள்வார். நான் மௌனமாகச் சிரித்து விட்டு கதிரையில் அமர்ந்தேன்.

விழா ஆரம்பமாகவில்லை.

''தம்பி இப்ப உம்முடைய கதைகளை பேப்பரிலை நான் கனநாளாகக் காணவில்லை இப்ப எழுதுவதை விட்டாச்சோ ...

கிராம சேவை அலுவலர் பேச்சைத் தொடர்ந்தார்.

''உண்மைதான். நான் அநேக நாட்களாக எழுதவில்லை... இனி இப்ப உள்ள சூழ்நிலையில் எழுதுவதற்கு உற்சாகமில்லை '' நான் பதிலிறுத்தேன்.

''அது சரி இந்த விழாவுக்குத் தலைமை வகிப்பவர் யார்?', நான் கேட்டேன்.

''அது இப்ப புதிதாய் வந்திருக்கும் இன்சினியராம்; எனக்கும் ஆளைத் தெரியாது'' அவர் கூறினார்.

வாசலில் வைக்கப்பட்டிருந்த கரும் பலகையில் நிகழ்ச்சி பற்றி எழுதியிருந்தார்கள். தலைமை வகிப்பவரின் பெயர் உருத்திரசிங்கம் என இருந்தது. எனக்குத் தெரிந்த பெயராகவும் இருந்தது.

விழா ஆரம்பமானது. பிரதம விருந்தாளி வாசலிலிருந்து மாலை அணிவிக்கப்பட்டு உள்ளே அழைத்து வரப்பட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் நினைத்தது சரியாகவே இருந்தது. இந்த உருத்திரசிங்கம் எனக்குத் தெரிந்தவர் தான். ஆனால் எனக்குள்ளே ஒரே ஆச்சரியம். இலக்கியம் என்றால் என்னவிலை என்று கேட்கும் இந்த மனுசன......

கொழும்பில் நான் கட்டிட இலாகாவில் வேலை பார்த்த சமயம் இந்த உருத்திரசிங்கமும் எங்கள் இலாகாவிலேயே ஒரு கட்டிட மேற்பார்வையாளராக பணியாற்றினார், வேலையில் நிபுணர் என்று பெயரெத்தவர்.

## து. வைத்திலிங்கம்

எனது மேசையடியில் வந்து என்னுடன் கதைத்துக் கொண்டிருப்பார்.

''என்னப்பா எந்த நேரமும் உனக்கு கதைப் புத்தகம் தான் உதிலை என்ன தான் படிக்கிறாயோ எனக்கு விளங்கவில்லை!''

''நீங்கள் வேணுமென்றால் கொண்டு போய் வாசித்து திருப்பித் தாருங்கோவன்'' நான் புத்தகத்தை நீட்டினேன். ''சீ, சீ எனக்கு வேண்டாம்; உதுகளிலை என்ன கிடக்கு வாசிக்க ..''

. அவர் போய் விடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் நான் இருக்கும் இடத்திற்கு ஏதோ அலுவலாய் என்னை தேடி வந்து கதைத்துக்கொண்டிருந்தார். எனது மேசையில் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகள் கிடந்தன. அவற்றையே பார்த்துக் கொண்டு இருந்தார்.

எழும்பிச் சென்று ஒவ்வொன்றாகப் புரட்டிப்பார்த்தார்.

''நீயடாப்பா இந்தப் புத்தகங்களுக்கு கனக்கச் செலவழிக்கிறாய் போலை கிடக்கு..... !

என்னைப் பார்த்துக் கூறினார்.

நான் சிரித்தபடி அமர்ந்தேன்.

''கல்கி...... குமுதம் .. விகடன் ..... நல்ல நல்ல பெயரப்பா! இவங்கள் உதுகளிலை ஆட்கள் வலுகெட்டிக்காரர். இனி இதுகளிலை நல்ல நல்ல கட்டுரைகளும் வருகுது என்ன?''

இஞ்சை பாரன்; வம்புப் படங்களும் அவையின்ரை கதைகளும்......''

விமர்சனம் தொடர்ந்தது.

''இதென்ன மாதப் புத்தகங்களே கிழமைப் புத்தகளோ?''

''ஒவ்வொரு கிழமையும் வாற சஞ்சிகைகள்.''

''உன்ரை சம்பளத்திலை அரைவாசிக் காசு இதுக்குப் போகும் போலை கிடக்கு?''

என்னைப் பார்த்து அகலக்கண்களை விரித்தபடியே கேட்டார்.

''அவ்வளவு செலவு இல்லை''

கை அடக்கமான விலையில் சஞ்சிகைகள் வந்த நேரம் அது.

''இப்ப இதிலை எழுபது எண்பது பக்கம் போலை கிடக்கு; கொடுக்கிற காசுக்கு பிழையில்லை; அப்ப நீ மாதத்திலை ஊருப்பட்ட பழம் பேப்பர், புத்தகம் நியாயமாய் விப்பாய் போலை கிடக்கு''

நான் அதற்கும் ஒன்றும் பேசாமல் இருந்தேன்.

''வீட்டை நம்முடைய மாமா இப்படி ஏதாவது பள்ளிக்கூடத்திலை இருந்து கொண்டு வருவார். நம்ம மனுசிக்காரி குமுதம், விகடன் எண்டு இடைக்கிடை வாசப்பா; நான் உதுகளிலை மெனக்கிடமாட்டேன.''

---

தாத்தாவிடம் பாட்டி:- என்னங்க பல்லுக் கழுவி விட்டீர்களா

தாத்தா பாட்டியிடம்:- ஒரே அலுப்பாக இருக்கு .... அங்க மேசையில தான் வைச்சிருக்கிறன் ஒருக்கா பரஷ் பண்ணி வடு.

— இ. மு

---

மறுபடியும் பக்கங்களைப் புரட்டினார்.

''இவன்கள் இந்தியாக்காரர் வலுகெட்டிக்காரர்; கதை, கட்டுரை எண்டு வடியாய் செய்கிறான் என்ன!''

''இதென்ன புதுசாய் ஒன்டு கிடக்கு!'' அவர் மேசை மேல் கிடந்த வேறொரு சஞ்சிகையை எடுத்துப் புரட்டினார்.

''அது யாழ்ப்பாணத்திலை அச்சடிக்கிறார்கள்'' நான் கூறினேன்.

''நல்ல கதைதான்...... இஞ்சையும் புத்தகம் அடிக்கிறான்களே...... எண்டாலும் இந்தியாப் புத்தகம் மாதிரி வராது என்ன?''

''நீங்கள் இங்கு வெளியாகும் சஞ்சிகைகளை ஒரு முறையாவது படிக்கவில்லையா? நான் கேட்டேன்.

''உதைப் படிச்சே பார்க்கவேணும்! பார்க்கத் தெரியும் தானே......''

''சரி நான் வாறன்: நீ புத்தகங்களை வாசி''

அவர் போய்விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது இலக்கிய ஆர்வமும் அறிவும் எனக்கு நான்றாகப் புரிந்தது.

அதன்பின் அவர் ஏதோ பதவி உயர்வு பெற்று திருகோணமலைப் பக்கம் மாற்றலாகிப் போய்விட்டார். நானும் அவரை மறந்து விட்டேன். இப்படி இலக்கிய விஷயத்தில் மாறான கொள்ளை கொண்டிருந்த மனுசன் இன்று சஞ்சிகை வெளியீட்டு விழாவுக் குத் தலைமை வகிப்பது...... எனக்கு ஜீரணமாகவில்லை.

உருத்திரமூர்த்தி குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்தார். அவரது உரை ஆரம்பமாயிற்று.

''அன்பானவர்களே...... இவ்வார்த் தைக்குப் பின் கணிசமான மௌனம். நான்...... நான் இந்த விழாவில்...... விழாவிற்கு இலக்கிய நிகழ்ச்சிக்கு .....;'

அதற்குப் பின் சொற்கள் வரவில்லை மலங்க மலங்க விழித்த படியே தனது சட்டைப்பையில் இருந்து ஒரு கடதா சியை எடுத்து வாசிக்கத் தொடங்கி னார்.

''அன்பான ரசிகப் பெருமக்களே...

''என்னை இந்த மாபெரும் இலக் கிய விழாவுக்கு தலைமை தாங்கும் சந்தர்ப்பத்தை அளித்த '' என்னால் இதற்கு மேல் இருக்கமுடியவில்லை. நான் எழுந்து பேசாமல் வெளியே வந்து விட்டேன்.

அந்தக் கையெழுத்துச் சஞ்சிகை வளரவேண்டும் என நான் வாழ்த்திக் கொண்டே நடந்தேன்.

★

---


# பேபி குளிர் அகம்

# Baby Cool Spot

**மிக்சர், மரக்கறிக்கேக், முட்டைக்கேக், கேசரி, சர்பத், இறீம்சர்பத், பூந்திலட்டு, றோல்**

மற்றும் ஏனைய குளிர்பானங்களுக்கும்

சுவையுடன் தரம் நாடுவோர்

அன்றும் இன்றும் என்றும் நாடுமிடம்

## பேபி குளிர் அகம்

✠ விஷேச வைபவங்களுக்கு ஓடர் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள் வைபவங்களுக்கான விஷேச மிக்சர் மிகக்குறைந்த விலையில் ஒரு முறை வாங்கினால் மீண்டும் மீண்டும் வாங்கத் தூண்டும்

## பேபி குளிர் அகம்

கே. கே. எஸ். வீதி, கொக்குவில். குளப்பிட்டிச் சந்தி,

★ தரம் நாடுவோர் தவறாமல் நாடுவது பேபி குளிர் அகம் ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டரங்கு விளையாட்டரங்கு விளையாட்டரங்கு

கிரிக்கெட் ஊழல்:

# மீண்டும் சகுனி!

## பரபரப்புக்களின் தொடர்ச்சியாய்...

கடந்த சில காலங்களாக உலகினை உலுக்கியதும் கலக்கியதுமான சில சம்பவங்கள் சர்வதேச அரங்குகளில் பலவித கோணங்களில் பரிணமித்து நின்றன. குறிப்பாக இவை செய்தித்துறை ஊடகங்களிற்கு வருமானத் தீனியினை வாரியிறைத்தன. இவற்றுள் சில அண்மைக்கால நிகழ்வுகள் அகிலத்தின் கவனத்தை அபரிமிதமாக ஈர்த்துக் கொண்டன.

அவ்வகையில் முக்கியமான முதலாவது சம்பவம், இளமையெனும் பூஞ்சோலையில் இன்ப ஆராகம இசைத்து ஏகாந்தமாய சிறகடித்த இங்கிலாந்துப் பூங்குயிலொன்று இளவரசி டயானாவாக மாறி இறகுகள் ஒடிக்கப்பட்ட துர்ப்பாக்கிய நிகழ்வாகும். இன்னொன்று, உலகின் இராஜாங்கங்களிற்கெல்லாம உபத்திரவம் கொடுக்க வல்ல அமெரிக்க வெள்ளை மாளிகையின் அதிகாரச் செல்லப்பிள்ளையைத் தன கிள்ளை மொழிகளால் கிறங்கடிக்க வைத்து அவரது கவனத்தையும் கௌரவத்தையும கொள்ளை கொண்ட மொனிக்காவின விவகாரமாகும்.

அனல் க. சே.

இவற்றின் தொடர்ச்சியாய் இன்றைய பரபரப்பிற்குக் காரணமாகி விட்டது. ''கனவான்களின் விளையாட்டில கையூட்டுச் சமாச்சாரம்''!

### அன்றும் இன்றும்

நேற்றைய வரலாறுகள் நிகழ்காலத்திலும் வடுக்களாகிப் போன விந்தையை இங்கே துல்லியமாகக் காணலாம்.

அன்று அஸ்தினாபுரத்துக் கௌரவ சபையிலே சூதாடினார் தருமர்; பந்தங்களையும் பதவிகளையும் பணயமாக வைத்தார்; தாயக்கட்டைகளை உருட்டினான் சகுனி; தலை கவிழ்ந்தார் தருமர்; தம்பியருடன் பன்னிரண்டாண்டுகள் வனவாசம் புகுந்தார்.

இன்று டெல்லி மாநகரின் தாஜ் பலேஸ் ஹோட்டலில் சூதாடினார் குரோன்யே; தனது கௌரவத்தையும் கிரிக்கெட் கலாசாரத்தையும் கைமாற்றாய் விற்றார்; டாலர் கற்றைகளைச் சுருட்டினான் சஞ்சீவ் சாவ்லா; தடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறி வீழ்ந்தார் குரோன்யே; தன்னந்தனியாளாய் ஆயுள் முழுவதும் அஞ்ஞாத வாசத்திற்கு ஆளாக்கப்பட்டார்.

## முடிச்சுக்கள் அவிழ்ந்தன!

டெல்லிக் காவற்துறையின் குற்றத்தடுப்புப் பிரிவில் அநாமதேயத் தொலைபேசி உரையாடல்களை அவதானிக்கும் குழுவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் இஸ்வர்சிங் தனது நீண்டநாள் அவதானிப்பின் பின் கடந்த ஏப்ரல் 13 ஆந் திகதி குரேன்யேவிற்கும் சால்வாவிற்கும் இடையிலான சூதாட்டபேர உரையாடலைப் பதிவு செய்ததே கிரிக்கெட் ஊழல் பற்றிய விசாரணைகளிற்கு முக்கிய பிடியாக அமைந்தது. பிரபல வர்ணனையாளர் ரொனி கிறேக் மொழியில் இஸ்வர் சிங்கிற்கு இது ஒரு ''what a catch!''

மேற்படி உரையாடல் அடுத்த நாள் அதாவது ஏப்ரல் 14 ஆந் திகதி நடைபெற விருந்த பெப்சி கிண்ணத்திற்கான 3வது ஒரு நாள் போட்டி பற்றி அமைந்திருந்தது. Faridabad இல் இடம்பெற்ற அவ்வாட்டத்தில் இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடி 248 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தது. பேசப்பட்ட பேரத்திற்கேற்ப குரோன்யேவின் 10 ஓவர்களில் 69 ஓட்டங்களும் நிக்கி போயேவின் 4 ஓவர்களில் 22 ஓட்டங்களும் ஸ்ரைடம்மின் 3 ஓவர்களில் 4 அகலப் பந்துகள் உட்பட 15 ஓட்டங்களும் விட்டுக்கொடுக்கப்பட்டன.



ஒருவன்:- அடே கிரிக்கெட் மச்சில செஞ்சரி அடித்தால் ஊகாசு கொடுப்பாங்களாம்

மற்றவன்:- ஒரு ரண்ணும் அடிக்காமல் விட்டால் அதைவிடக் கூடக்காசு கொடுப்பாங்களடா.

— இ. முரளி

தொடர்ந்து ஆடிய தென்னாபிரிக்கா இரு விக்கட்களினால் வென்றாலும் கிப்ஸ் 8.4 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நிலைமையின் நிதர்சனத்தைப் புரிந்து கொண்ட பொலிசார் மேற்படி உரையாடலை அன்றே வெளியிட்டு அம்பலப்படுத்தினர். முதலில் மறுப்புத் தெரிவித்த வந்த குரேன்யேயும் மனச்சாட்சிக்கு மதிப்பளித்து மதகுருவிடம் சட்டத்தரணியிடமும் உண்மையை ஒப்புக்கொண்டார்.

இரு தசாப்தங்களாக இன ஒதுக்கு முறைக்காய் சர்வதேசக் கிரிக்கெட் அரங்கினின்றும் தனிமைப்படுத்தப்பட்ட தென்னாபிரிக்கா 1992 இலேயே மீண்டும் தனது முதலாவது சர்வதேச தரப்போட்டியை இந்தியாவுடன் ஆரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தது. சம்பிரதாயங்களின் தாற்பரியத்தை உணர்ந்து இருநாடுகளும் இராஜீக ரீதியில் பிரச்சனையை அணுகின. கிங் கமிஷன் என்ற விசாரணைக்குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கையின் படி தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை குரோன்யேவிற்கு ஆயுட் காலத்தடையை விதித்தது.

நிக்கிபோயே எச்சரிப்பின் பின்னர் மன்னிப்பளிக்கப்பட்டு விளையாடி வருகின்றார். கிப்ஸ் இடைக்காலத்தடைக்குப் பின் மீண்டும் தற்போது களமிறங்கியுள்ளார். ஸ்ரைடமும் வில்லியம்சும் என்ன ஆனோர்களோ தெரியாது. ஆயினும் குரோன்யே தனது வாக்கு மூலத்தில் அசாருதீன் பற்றிக் கூறியதைத் தொடர்ந்து இந்தியக் கிரிக்கட் வாரியம் விழித்துக்கொண்டது.

## தொடர்ந்தது பேரிடி!

குரோன்யே விவகாரத்தைத் தொடர்ந்து வீரர்களிற்கும் இலஞ்ச ஊழல்களிற்குமான தொடர்பு பற்றிய சம்பவங்கள் சூடுபிடித்தன. ஏற்கனவே இது போன்ற குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தபோதும் அனைவராலும் ஒதுக்கப்பட்டிருந்த மனோஜ் பிரபாகர் மீண்டும் உற்சாகமானார். பிரச்சனை மேலும் பெருக்கவே இவ்விடயம் தொடர்பான ஆராய்விற்கு மத்திய புலனாய்வுப் பணியகம் (CBI) அழைக்கப்பட்டது.

குரோன்யேவின் வாக்கு மூலத்திலிருந்து அவர் தாஜ் பலேஸ் ஹோட்டலின் 346 ஆம் இலக்கு அறையிலும் பின் தொலைபேசிகளிலும் தொடர்பு கொண்டு பேசிய சூதாட்ட விவகாரச் சூத்திரதாரியும், பிரபல ஆடைவர்த்தகருமான சஞ்சீவ் சாவ்லா பற்றிய மேலதிக விவரங்கள் கிடைத்தன. அதனைத் தொடர்ந்து அவரது நண்பர்களிலொருவரான ராஜேஸ் கல்றாவைக் கைது செய்து விசாரித்தும் மற்றொருவரான திரைப்பட நடிகர் கிஷான் குமாரிடம் இரகசிய விசாரணை செய்தும் CBI தனது புலனாய்வுப் பணிகளை முடுக்கிவிட்டது.

---

ரஞ்சன்:- முரளி என்னோட இருக்கிறது ஒரு கம்பியூட்டர் இருக்கிறது மாதிரி.

தயாளன்:- ஏன் அவ்வளவு துணையோ?

ரஞ்சன்:- இல்லை. அவன் அடிக்கடி வைரஸ் வேலை பார்க்கிறான்.

— பிரசாத்

---

விளைவாக கபில்தேவ், அசாருதீன், மொங்கியா, ஜடேஜா, நிகில்சோப்ரா, அஜய்சர்மா ஆகியோரின் வீடுகள் அதிரடிச்சோதனைக்கு இலக்காகின. அதே சமயம், தான் நிரபராதி என்பதைக் தொலைக்காட்சி நேர்காணலில் கண்ணீர் சிந்தியபடியே தெரிவித்த கபில்தேவ் இந்திய அணியின் பயிற்றுனர் பதவியினையும் இராஜினாமாச் செய்தார். CBI இன் விசாரணைகளை மக்களின் எதிர்பார்ப்பும், பாராளுமன்றக் கேள்விக் கணைகளும் அமைச்சரவையின் ஆலோசனைக் கூட்டங்களும் துரிதப்படுத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மட்டங்களிலும் மேற்கொண்ட புலன் விசாரணைகளின் மூலம் பலத்த எதிர்பார்ப்புகளிற்கு மத்தியில் CBI தனது விசாரணை அறிக்கையை விளையாட்டு அமைச்சரிடம் சமர்ப்பித்தது. கபில்தேவும் சோப்ராவும் குற்றமிழைத்ததாக அதில் குறிப்பிடப்படவில்லை. எனினும் ஏனையோரின் குற்றங்களிற்கான சட்டபூர்வ நடவடிக்கையை இந்தியக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையே எடுக்க வேண்டியிருந்ததால் அது தன் சார்பில் ஓய்வுபெற்ற நீதிபதி திரு கே. மாதவன் தலைமையில் ஒரு தனிநபர் விசாரணைக்குழுவை அமைத்தது.

CBI அறிக்கையை அடிப்படையாக வைத்து, அநீதி இழைத்தார்களெனக் காணப்பட்டிருந்த ஒவ்வொருவரிடமும் அவர் தனித்தனியாக விசாரணை மேற்கொண்டார். இதற்கிடையில் மேற்படி வீரர்கள் மீது தேசத்துரோக வழக்குத்தாக்கல் செய்யக்கூடச் சில தனிநபர்கள் பிரயத்தனப்பட்டனர்.

தீவிர விசாரணைகளின் பின் மாதவனின் அறிக்கை பெரும்பாலும் CBI அறிக்கையைத் தழுவியவாறு நவம்பர் 25ம் திகதி இந்தியக் கிரிக்கெட் வாரியத்திடம் கையளிக்கப்பட்டது. தொடர்ந்த சில தினங்களிற்குள்ளாகவே குற்றஞ்சாட்டப்பட்ட விரர்கள் முன்னிலையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தனது முடிவுகளை வெளியிட்டது.

## "அவுட்" டான விதம்!

''அம்பயரால் சந்தேகிக்கப்பட்டு மூன்றாம் மத்தியஸ்தரால் பச்சை விளக்குக் காட்டப்பெற்ற'' மொங்கியோவிற்கு அவமானங்களின் பின்பும் ஆன்மாவிற்கு அமைதி கிடைத்திருக்கும். டெல்லி மாநில அணித்தலைவர் அஜய் சர்மா வாழ் நாள் தடைக்கு இலக்காக உடற்பயிற்றுனர் அலி இறானிக்கு ஐந்து வருடகாலத்தடை விதிக்கப்பட்டது. ஏற்கனவே சர்வதேசப் போட்டிகளினின்றும் ஓய்வு பெற்ற மனோஜ் பிரபாகர் உள்ளூர் ஆட்டங்களின்றும் ஐந்து வருடம் ஒதுக்கப்பட்டார்.

அஜய் ஜடேஜா மட்டும் ஏனோ பாவம் போல் தெரிகின்றார். இந்தியா தோற்கும் அனேக ஆட்டங்களிலெல்லாம் சோபையிழக்க விடாது சிறப்பாக ஆடும் ஜடேஜா செல்வச்செழிப்புடன் எண்ணற்ற மட்டங்களில் ஏராளமான இரசிகர்களை (பெரும்பாலும் பிரபல சினிமா நட்சரங்களுட்பட்ட இரசிகைகள்)யும் கொண்டிருந்தவர். சேர்வாரோடு சேர்ந்தாரோ சேர்க்கப்பட்டாரோ, அடுத்த முறை உலகக்கிண்ணத்தில் அவரின் அளப்பரிய அனுபவம் இந்தியாவிற்குக் கிடைப்பதரிதேயாகும்.

தன் நுணுக்கமிகு துடுப்பாட்டத்தாலும் நூதனமான களத்தடுப்பாலும் திண்மையுடைத் தலைமைத்துவத்தாலும் சர்வதேச கிரிக்கெட் சாதனைக் கதவுகளைத் தட்டிய அசாருதீன், சில கனவான்கள் வீசிய கரன்சி ஜோக்கர்களிற்குக் கிளீன்போல்ட் ஆனது தான் விந்தை! முதல் மனைவியை விவாகரத்துச் செய்து திரைப்பட நடிகை சங்கிதா பிஜ்லானியைத் திருமணம் புரிந்த அசாரிற்கு மனைவி மூலம் ஏற்பட்ட நட்சத்திரப் பழக்கங்கள் சூதாட்டத்தில் நட்புறவாக மேம்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996 titan கிண்ணம், 1997 ஆசியக்கிண்ணம் போன்றவற்றில் ஆட்டங்களை முன் கூட்டியே நிர்ணயித்த குற்றங்களிற்காய் அசாரிற்கு ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உலகக் கிரிக்கெட் மன்றத்தின் பிரபல ஊழல் ஒழிப்பு விசாரணையாளர் போல் கொண்டனும் அவுஸ்ரேலியப் பிரதிநிதி கிரேக்மாலிக்கும் இந்தியன் கிரிக்கெட் வாரிய முடிவுகளை ஆராயும் அதே வேளை விளையாட்டுத்துறை அமைச்சர் செல்வி உமாபாரதி நெறிப்படுத்தலின் கீழ் மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## எங்கேதான் இல்லை?

இந்திய அணியில் மட்டுமன்றி, கிரிக்கெட் உலகின் மூலைமுடுக்கெங்கலுமே ஒளிந்து கொண்ட ஊழல் சாத்தானின் அலறல் இப்போது தான் எல்லோரிற்கும் கேட்கத்தொடங்கியுள்ளது. காதோடு காது வைத்தாற்போல் கடந்த சில வருடங்கள் முன்னராகவே அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை மார்க் வோவிற்கும் ஷேர்ண் வோணிற்கும் தண்டத்தை அறவிட்டுக் கண்டித்து வைத்தது.

பாகிஸ்தானில் பலவீரர்கள் சம்பந்தப்பட்ட இலஞ்ச ஊழல் வழக்குகள் அவர்கள் வழமையான பாணியிலேயே புகைந்து கொண்டிருக்கின்றன. இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் அலெக்ஸ் ஸ்ருவர்ட்டிடமும் விசாரணை நடத்தப்பட்டிருக்கின்றது. நியூசிலாந்தின் முன்னாள் அதிசிறந்த அணித்தலைவர் மார்ட்டின் குரோவிடமும் விசாரணை மேற்கொள்ப்பட்டதோடு தற்போதைய தலைவர் பிளமிங்கையும் இங்கிலாந்தில் வைத்து இலஞ்சம் பெறவைக்க முயற்சித்த சங்கதிகளும் சந்திக்கு வந்துள்ளன.

இப்போது இலங்கை அணியின் அர்ஜீன, அரவிந்த ஆகியோர் மீதும் ஊழல் புகார்கள் உருவாக்கியுள்ள. ''கறுப்பு நட்சத்திரம்'' பிரையன் லாராவையும் மேற்கிந்தியக் கிரிக்கெட் நிர்வாகம் மேற்படி சிலமுறைகேடுகள் சார்பாக விசாரித்ததாகக் கூறப்படுகிறது.

## எதிர்காலம் எப்படியோ!

துடுப்புக்களால் தீரம் காட்டி களத்தடுப்புக்களால் வீரம் ஊட்டி தமது அணிகளைக் காக்க வேண்டிய வீரர்களும் மனிதர்தானே? கிடைத்தது சந்தர்ப்பம்; கொடுத்தனர் ''கள்ளக் குபேரன்கள்''; கெடுத்தனர் கிரிக்கெட் கலாசாரத்தை; உடைத்தனர் ஆயிரமாயிரம் அபிமான இரசிகர்களின் நம்பிக்கைக் கோட்டையை.

''வெற்றிகளும் தோல்விகளும் வீரர்களிற்கு அழகு'' என்னும் விளையாட்டுத் தாற்பரியத்தையே தலைகீழாக்கி அவற்றை முன்கூட்டியே நிர்ணயித்தே விட்ட சில வீரர்களின் குற்றங்கள் கிரிக்கெட் வரலாற்றிற்கு உண்மையிலேயே அழிக்கவொண்ணாக் கறையை ஏற்படுத்திவிட்டதென்றால் அது மிகையன்று.

என்னதான் நிகழ்ந்தாலும் இன்னும் எஞ்சி நிற்கும் இரசிகர்களை ஏமாற்றாது, கண்ணியம் மிக்கவர்களாய் கடைமையைச் செவ்வனே ஆற்றி, உலகின் புகழும் வளமும் மிக்க கனவான்களின் ஆட்டத்தைக் களைகட்ட வைப்பார்கள் இனிவரும் விரர்கள் என எதிர்பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானொரு குழந்தைத் தொழிலாளி

தாயிருக்கு தந்தையில்லை தாண்டி வந்த போரதனாலே
தங்கையொடு தம்பியும் தானுண்டு எந்தனது வீட்டினிலே
தாய் வீட்டிலிருப்பதில்லை வேலை செய்வதனாலே
தங்கை தம்பி பள்ளி போவதில்லை வயது வராததினாலே

நான் பள்ளி போவதில்லை வயது வந்ததினாலே
வீட்டில் வறுமை பூத்திருக்கு தந்தை இல்லாததினாலே
வேளைக்குணவு கிடைப்பதில்லை நிவாரணம் பிந்தினதாலே
நானும் கடையில் வேலை செய்கிறேன் வறுமையினாலே

காய்ந்து உடல் நோகின்றது சுடும் வேலையினாலே
காரணமின்றி அடிவாங்கிறேன் வயது பத்ததினாலே
படிப்பதற்கு ஆசையுண்டு நண்பர் பள்ளி செல்வதினாலே
படிப்பது கனவாய்ப் போகிறது வீட்டு நிலவரத்தாலே

எமைக் காக்க யாருமில்லை ஏழை என்பதினாலே
எமக்குதவ யாருமில்லை தம் தன்னலத்தாலே
எமக்கு மீட்சி இருக்கிறது இங்குள்ள சட்டத்தினாலே
இதைச்சொல்லி எமை மீளுங்கள் உங்கள் கருணையினாலே.

- நாகோபி

# விதிகள்

டாவின்சீயின் அறிவால் பிறந்தது கூர்ப்பு அன்று!
சூல் இன்றி பிறக்குது குழந்தைகள் இன்று!
பூ இன்றி (குறியீடு, மகரந்த சேர்கை) கனிகள் பிறந்தாலும்!
பா இன்றி கவிதைகள் பிறந்தாலும்!
இயற்கையின் (இறைவனின்) காரணமின்றி
பிறக்குமோ விதிகள்?

- இராமர்

உள்ளத்திலே உலாவந்த படைப்புகள் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களை அனுப்பி வையுங்கள் அவைதான் வரப்போகும் உள்ளம் மலர்களுக்கு உருக்கொடுக்கையில் எமக்கு கை கொடுப்பவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# விலங்கு

- உடுவில் அரவிந்தன்

விரைவாக வீசியகாற்றிலே யன்னல் படாரென்று மோதி என்சிந்தனையைக் குலைத்தது. எனக்கு முன்னே மேசையில் விரித்துவைக்கப்பட்டிருந்த பாடப் புத்தகம் தாள்களை அடித்து, தான் இருப்பதை நினைவூட்டியது அதற்கு அருகில் அம்மா எப்போதோ வைத்தி விட்டுப்போன தேநீர் ஆறிக்கிடந்தது.

ஏன் இப்படிச் சிந்தனையில் மூழ்கினேன்? எதிலிருந்துயோசிக்க ஆரம்பித்தேன் என்பதையே மறந்துவிட்டேன். மனம் ஒரு குரங்கு என்று சும்மாவா சொன்னார்கள்?

ஒரு விடயத்திலிருந்து இன்னொரு விடயத்துக்குத் தாவி.. ...... அதிலிருந்தி அடுத்ததற்கு மாறி..... !

இப்படியே தொடர்கதைதான்.

இரவு அப்பா கதைத்தவிடயமே என் நினைவுகளின் நெடும் பயணத்துக்கு ஆரம்ப விசை என்பதை உணர்ந்து கொண்டேன்.

அதைப்பற்றி விபரிக்க முன், எங்கள் குடும்பத்தைப் பற்றி நிச்சயம் கூறத் தான் வேண்டும். அப்போது தான் இரு தரப்பு நியாயங்களையும் புரிந்து கொள்வீர்கள்.

அப்பாவுக்கு வயது எழுபது.

நீங்கள் ஆச்சரியமாகப் பார்ப்பது தெரிகிறது.

எழுபது வயதில் பதினெட்டு வயது மகளா என்று நீங்கள் கேட்கக்கூடும்.

ஏன் இருக்கக் கூடாதா?

என்னுடைய அப்பா கொஞ்சம் பிந்தித்தான் திருமணம் செய்தவர். நீண்ட காலம் கழித்துத்தான் நான் பிறந்தேன். எனக்குப் பின் எவருமில்லை. அதனால் அதிகளவு செல்லம் என நினைத்து விடாதீர்கள். கட்டுப்பாடுகள் என்னை எப்போதும் கவிந்திருக்கும். அவர்கள் என்னைப் பேணிக்காப்பதற்காகப் போடும் பொன்விலங்காகவும் அவை இருக்கலாம்.

தனிப்பிள்ளையாக ஒரு போதும் பிறக்கக்கூடாது. கூடப்பிறந்தோர் ஓரிருவராவது இருக்கவேண்டும், சண்டை பிடித்து, அழுது பிறகு சந்தோஷப் பட்டு ...!

இப்படி எத்தனை ஆரவாரமாக இருக்கும்!

தனிமை!

அதைப்போலக் கொடியது உலகத்தில் எதுவுமில்லை,

எனது அப்பாவைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன். அதற்குள் எங்கோபோய்விட்டேன். சரி, விடயத்துக்கு வருவோம்.

என்னுடைய அப்பா கிட்டத்தட்ட ஒரு நிலப்பிரபு தான். நீர்வேலியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைவாசித்தோட்டக்காணிகள் அவருடையவை பெரும்பாலானவை குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு விட்டன. எனது பெயரில் மட்டும் சுமார் முப்பது இலட்சம் ரூபா இருப்பதாகப் பேசிக்கொள்வார்கள். அது பற்றி எனக்குத் தெரியாது. தெரிந்து வைத்திருக்கவேண்டும் என்ற ஆவலும் எனக்கில்லை. ஏனென்றால், வேண்டிய பொருள் வேண்டியபோது எனக்குக் கிடைக்கும் பிறகு, எனது வங்கிக்கணக்குகளை எதற்காகத் தெரிந்து வைக்க வேண்டும்? நேற்றிரவு அப்பா சொன்னவை அத்தனையும் என் நினைவிற்கு வந்தன.

அவருக்கு வயதாகி விட்டபடியால் எனக்குத் திருமணம் செய்து வைக்கப் போகிறாராம்.

எனக்குத் திருமணமா?

ஓடியாடித்திரியும் மாணவப் பருவத்தையே கடக்காத எனக்கா? மாணவப் பருவத்திலே காதல் மட்டும் மலராலாமோ என்று நீங்கள் கேட்கக்கூடும். அப்படியான சந்தர்ப்பம் கிடைத்தாலல்லவா என்னால் இதற்குப் பதில் சொல்ல முடியும்!

---

சாவகச்சேரியைச் சேர்ந்தவர்:— உங்களைச் சாவகச்சேரிக்கு அழைக்கிறேன் ஒருக்கா வாருங்கோவன்!

கொழும்பைச் சேர்ந்தவர்:— சாவகச்சேரிக்கோ! ஒரே வெக்கையாய் இருக்கும் வரமாட்டன்.

சாவகச்சேரியைச் சேர்ந்தவர்:— இப்போ வாங்கோ ஒரே வெளியாய் இருக்கு நல்லா காத்து வாங்கலாம்.

என். பி.

---

அப்பா சொன்னதும் நான் உடனடியாகவே மறுத்துவிட்டேன். நான் சம்மதிக்க மறுத்ததும் அப்பாவின் கண்கள் கலங்கிய விதம் இருக்கிறதே! அதை என்னால் மறக்கமுடியவில்லை.

என்றாலும், இந்தச் சிறு வயதில் திருமணக்கூட்டுக்குள் அகப்படும் உத்தேசம் எனக்கில்லை. அப்பா அந்த விடயத்தை அத்தோடு விட்டு விட்டாலும் மீண்டும் பிரச்சினை தொடரும் என்று தோன்றியது.

---

வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை வீணாக்காதீர்கள் ஏனென்றால் நேரத்தால் ஆனது தான் வாழ்க்கை.

---

''என்னடி? தேத்தண்ணியும் ஆறிப்போய்க்கிடக்கு. படிக்கிறியோ இல்லை கனாக்காணுறியோ?''

அம்மாவின் குரல் என்னை உலுப்பியது.

நிமிர்ந்து அமர்ந்தேன். இடறிக்கொண்டு என்குரல் வெளிப்பட்டது.

''இல்லையம்மா. இரவு நித்திரை முழிச்சது. அது தான் அயர்வாக கிடக்கு'' கைகளை மேலுயர்த்திச் சோம்பல் முறித்த படி கூறினேன்.

''அயர்வோ? இந்த வயதிலை அயர்வெண்டா என்ரை வயது வர என்ன செய்யப்போறியோ? சரி ... அது கிடக்கட்டும் இந்தப் படத்தப்பார்.''

''ஆரின்ர படம்?'' அசிரத்தையாகக் கூறியபடி வாங்கிப் பார்த்தேன்.

முற்றாக மீசை வழிக்கப்பட்ட ஒரு ஆண் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார். களங்கமற்ற சிரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தப் பெடியனைத்தான் உனக்குப் பேசிக்கிடக்கு ஆள் போரார்தனையிலை எஞ்சினியரிங் முடிச்சிட்டு அங்கால கொழும்பிலை வேலை செய்யுது. வாற தையிலை முடிப்பம் எண்டு நிக்கினம் வீட்டுக்காரர். நல்ல குணம் வளமான பெடியனாம்"

அம்மா சொல்லிக் கொண்டே போனார்.

'கொழும்பிலை வேலையெண்டா நானும் அங்காலையெல்லோ போக வேணும். கடைசிக்காலத்திலே உங்கள் இரண்டு பேரையும் ஆர் பாக்கிறது? இந்தச் சொத்துக்களெல்லாம் அழியட்டும் எண்டு முடிவு கட்டிட்டீங்கள் போல' என்மனம் அழுதது.

மற்றைய மாணவிகளைப் போலப் படிக்கவேண்டும் என்ற எனது ஆவலை வெளியிட்டேன்.

"அம்மா நான் படிக்கப்போறன்"

"மூடு வாயை! அந்நாள் இண்டைக்கோ நாளைக்கோ எண்டு நிக்குது. அதுக்கிடையிலே உனக்கொண்டைப் பேசி முடிப்பம் எண்டா....."

---

**போர் வடு**

குண்டொன்று தன்னுடல்
சிதைக்கும்போது உயிர்கொண்ட
உடலங்கள் பல தம் உருவின்றி
வெற்றுடலாய் இம்மண்ணிற்
குரமாகும்.

— வெண்புறா

---

அம்மா சிறிப்பாய்ந்தார்.

அப்பாவின் இறுதிக்காலம் நெருங்குவதை நினைவூட்டியதும் என்னால் எதுவும் பேசமுடியவில்லை. நேற்றிரவு அப்பா கலங்கி நின்றது என்மனக்கண் மூன் விரிந்தது.

பாவம் அப்பா! இந்த வயதான காலத்தில் அவருடைய ஒரேயொரு ஆசையும், கவலையும் இதுவாகத்தானிருக்கும். அவருக்காக எனது எதிர்காலக் கனவுகளையும், கற்பனைகளையும் சிதைத்துக்கொள்வதே இப்போதைக்கு ஒரேயொரு வழியாகத் தெரிந்தது.

என்னுடைய எதிர்காலம் நினைவுத்திரையில் ஓடியது.

பிள்ளைகளைச் சீராட்டுவதிலும், சமைப்பதிலும் மட்டுமே நேரம் கழிந்துகொண்டிருக்க, எல்லோரும் சென்றபின் வீட்டினுள் அடைப்பட்டபடி பொழுதுபோகாமல் கண்ணீரை மட்டுமே துணையாகக் கொண்டு, என்னுள் நானே ஒடுங்கிக்கொண்டு.....

ஓ.....! எவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்கிறேன்! எத்தகைய இழப்பு இது!

ஒரு பெண் படிக்கத்தான் வேண்டும். அப்போது தான் சமூகம் ஒரு சமான மட்டத்திலே நகர்ந்துகொண்டிருக்கும். என்னைப் போன்றவர்களுக்கு இது தவிர்க்க முடியாத சாபம். இதிலிருந்து மீள்வதென்பது இயலாத காரியம்.

எனினும், என் மகளையாவது நான் நன்றாகப் படிக்க வைப்பேன்! இவ்வாறு உறுதியெடுத்துக் கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழிகள் இருக்கவில்லை.

(யாவும் கற்பனை)

---

நண்பன்1:- கடவுள் பக்தியான பெண்ணைக் கட்டினது தப்பாப்போச்சு

நண்பன்2:- ஏன்ரா?

நண்பன்1-- ஹனிமூனுக்கு எங்கபோவம் என்று கேட்டன், முனீஸ்வரத்திற்குப் போவம் என்கிறாள்.

— பிரபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழுநிலை வாதமும் -
# - பரந்த பார்வையும்

ஒன்றுக்குமேற்பட்டவர்கள், கூடும்போது அதுகுழுநிலை ஆகின்றது, விதிவிலக்கா தனிநபர் ஆணைக் குழு என்னும்போது தனிநபரே குழுநிலையில் நின்று உதவிய ஆட்களுடன் செயல்படுபதே தனிநபர் ஆணை குழுவாகும், இவ்வாறு உருவாகும் குழு தன்னை விரிபுபடுத்தும் போது குழுமம் குழாம், அமைப்பு, நிறுவனம் என்பதும் அது மக்கள் கூட்டம் சார்ந்தாக இருந்தால் குடும்பம் உறவு, உறவினர் குழாம் கிராமம், ஊர்பிரதேசம் நாடு எனவிரிவடையும், மொழி மதமும் அவ்வாறே!

ஆக எல்லவற்றிக்கும் அடிப்படை பிறப்பிடம் குழுவாகும் எனவே குழுநிலை வாதமும் அடிப்டையில் இருந்து விரிவடைந்தாலும் அடிப்படை நிலைகளை முழுவதுமாக அது தொலைத்துவிட்டு செல்வதில்லை உ+ம் ஒரு குடும்பத்திற்க்கும் பக்கத்து வீட்டுக்கும் சண்டை, முக்கியபாத்திரம் குடுபம் பெண்மணி இவ்வாறு இருகுடுபம் மோதும் போது, கணவனுக்கு புரிகின்றது தனது மனைவியில் முழுப்பிழை, ஆனால் மனைவிக்கு சார்பாகவே கணவன் வாதடுகின்றான் காரணம் மணைவியோ அடங்கா பிடாரி ஏதாவது இசகுபிசாக கதைத்தால் உலை கொதிக்காது அடும்பும் புகையாது பட்டினியை நிணைந்து பயப்படுகின்றன், அல்லது துரோகிபட்டம் கட்டி குடும்பத்தில் இருந்து விரட்டியடிக்கப்படலாம் என்பதால்.

---

- இராம ஜெயபாலன்

---

## குழு நிலைநோக்கு:

குழுநிலைநோக்கை புரியுமுன் சற்று, பின்நோக்கி மனித வரலாற்றை திரும்பிப்பார்ப்போம். மனிதவரலற்றின் ஆரம்பத்தில் மனிதன் குழுக் குழுவாகவே வாழ்ந்தான். குழு நிலைக்கு அன்றைய முதல்நோக்கு ஆண் பெண் வேறுபாடு. ஆக மனிதனுக்கு மனிதன் தேவைப்பட்டான் இவை விரிவடைய விரிவடைய கூட்டுறவு உருவானது அத்துடன் நிற்கவில்லை தமது உரிமையை பெற்று வாழ்வதை காட்டிலும் மற்ற குழுக்களுடன் மோதி அவர்களை தமது கட்டுப்பட்டுக்குள் கொண்டுவரும் முயற்ச்சியில் ஈடுபட்டான், இத்தகைய மேலோங்கித்தனத்தால், நாடுபிடிக்கும் ஆசை அவனை ஆட்கொண்டது ஆக சிறு குழுக்களே முழு உலகையும் பிடித்து ஆளத் தலைப்பட்டது, அவ்வாறு அவர்கள் பிடிக்கும் குழுக்கள்மேல் தங்கள் மொழி மற்றும் மதத்தை திணித்து, அவர்களை தங்கள் குழு இயல்புக்கு கொண்டு வர முயற்ச்சித்தார்கள், ஆனால் இது மாறி மாறி நடக்க பெரும்யுத்தங்கள் கௌரவ அந்தஸ்து போட்டிகள், என்பன ஏற்பட்டன,.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இரண்டாம் மாகயுத்தம் வரை நீடித்ததால், இன்றைய பெரிய நாடுகள் சிறிய நாடுகள் முதல் மதங்கங்கள் மொழிப்பிரிவுகள் எனது சமச்சீர் அற்ற உலகு தோன்றயது.

இத்தகைய நிலையில் ஐக்கிய நாடுகள் சபைதோன்றியது ஆனாலும் நடுநிலை வாய்ந்தது என்று சொல்வதற்கில்லை ஆயிலும், படிப்படியாக மேன்பட்டு வருகின்றது.

ஆனால் இந்தமேலாதிக்க தன்மையில் இருந்து விடுபட்டு, எல்லா இனக் குழுமங்களும் தமக்குரிய உரிமைகளை பெற்று வாழத்தலைப் படுகின்றன, ஆனால் எல்லா நாடுகளுமே, சிறு சிறு துண்டுகளாய் உடைபட்டு போனால் மீண்டும் பழைய பல்லவி என்பதுபோல் ஒரு சிறு குழுவே உலகை பயமுறுத்தி உலகை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முடியும் என்னும் அச்சத்தால் அமெரிக்காவின் மேலாதிக்கம் நிலைத்து நிற்க பல ஏதுக்களை ஏற்படுத்திவிட்டது. ஆனாலும் எந்தக் காலத்திற்கும் மேலாதிக்க வெறி ஓயப்போவதில்லை காரணம், பரந்த பார்வையும் பகுத்தறிவும் இன்மை, இதனால் மதவாதமும் முதாளித்துவ வாதமும் பணிப்போராய் புகைந்து கொண்டிருக்கின்றது.

சரி இப்போது குழு நிலை நோக்கை பார்ப்போம் குழுநிலை என்பது உரிமை பெறும் ஒரு போரட்டவடிவம் மட்டுமன்றி கூடிகுளாவி கூட்டுறவாய் வாழ்வதற்க்கும் பயன் படுகின்றது இங்கே குழுநிலைவாதமும் இடம் பெறுகின்றது உ+ம் ஒரு தொழில் ஸ்தனத்தை எடுத்துக் கொள்வோம்.

---

**ஆசிரியர் :-** ஈசன்! பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த விஞ்ஞானிகள் யாராவது ஒருவர் பற்றி ஏதாவது கூறு பார்க்கலாம்.

**ஈசன் :-** ஒருவர் என்ன சேர்! எல்லோரைப்பற்றியும் கூறுகிறேன். அனைவருமே இப்போ இறந்திருப்பார்கள் சேர்.

— இ. மு

---

அந்த தொழிஸ்தானத்தை நிர்வாகிப்பவகளால் உருவாக்கப்படும் சட்ட திட்டத்திற்கமைய செயல்படும் போது நாம் எத்தகைய குழுநிலையில் இருந்து வந்தாலும் எத்தகைய பெரிய புள்ளியாக வெளியில் இருந்து வந்தாலும் சட்டம் எம்மை வழி நடத்தும் போது மட்டும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் பாதுகாப்பு உண்டு, தவிர தமது கடமையை சரிவரச் செய்யவம் முடியும்.

ஆனால் சில அதிகாரிகள் தமக்கு சர்வாதிகாரத்தை குவிக்கும் பொருட்டும் தாம் செய்யும் தில்லு முல்லுக்களை மறைக்க அதிகலாபம் காட்டவும் தமக்கு அடுத்த நிலையில் இருக்கும் அதிகாரிகளை செல்லாக் காசக்கி தமக்கு ஆதரவாளர்களை சரியான முறையில் சிபரீசு செய்து உரியபதவியுயர்வு வளங்காமல் ஆனால் எடுபிடிகளையே எஜமான் ஆக்குவதால் ஒரு நிறுவனத்துக் குள்ளே அதிகாரப்போட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மரபாகும் போது வாழ்க்கையே வேதனையாகிவிடும், சம்பவங்கள் நினைத்துப்பார்க முடியாதவை.

ஆனாலும் ஒரு நிறுவன சட்டதிட்டத்திற் கப்பால் அங்கு பணிபுரிபவர்கள் நண்பர்களாகவும் தமது உரிமையை பெறும் பொருட்டு உரிமை போரட்ட தொழில் சங்கமாகவும், மற்றம் சமதொழில் செய்பவர்கள் பல காரணங்களால் தமக்குள் ஒன்றுமையாக செயல்படுவதும், மற்றும் அங்கு வேலை செய்யும் ஒவ்வொரு மதத்தினரும் தத்தமது வழிபாட்டை மேன்படுத்த குழுவாக செயல் படுவதும் இவை இயல்பாக தவிர்க்க முடியாத ஒன்றே:

## குழு நிலையில் அறிவு வளர்ச்சி!

எல்லோராலும் சுயசிந்தனை ஆற்றல் பெறமுடியாது ஆகமரபை நம்பியே தம்மை மேன்படுத்திக் கொள்ள வேண்டும் அதில் பல குறையிருந்தாலும் அவை வீசி ஏறிந்து விட்டு முட்டாள்களாக சீவிக்கமுடியாது இந்த வகையில் ஆபூர்வ அறிவு உடைவர்களால் அறிவு காலத்துக் காலம் உருவாக்கப்பட்டு மேன்படுத் தப்பட்டு வந்தாலும் இன்றைய நிலையில் அறிவியல் அனுபவத்தை பெற்ற பின்னர் தமது திறமைமை மேன்படுத்தும் நிலையே இன்று காணப்படுகின்றது.

---

அப்பாவிகள் ஆனால் அகால மரணமடைந்தவர்கள் அநியாய மாக மரணமடைந்தவர்கள் வாழ்கின்ற சொர்க்கத்தின் பகுதி இது

அனுகம பண்டார:- யாரப்பா நீர்?

கந்தையா:- நான் இலங்கையைச்சேர்ந்த தமிழன்

அனுகமபண்டார:- அப்படியா, நான் இலங்கைத்திருநாட்டின் பெரும் பான்மை இனத்தவன்

கந்தையா:- அது அங்கயாய் இருக்கலாம் இங்க நாம்தான் பெரும்பான்மை கண்டியோ!

தரன்

---

உ+ம்: ஒரு நாட்டில் துடுப்பாட்டம் சிறப்பாக மேன்படுத்தப் பட்டால் அதில் இணையும் தனிநபர்களும் அந்த திறமையூடே தம்மை மேன்படுத்தி சாதனை செய்ய முடியும், ஆனால் எப்பேற்பட்ட திறைமை சாலியானாலும் புதிதாக ஒரு நாடு துடுப்பாட்டஅணியை உருவாக்கினால் அந்த அணி எடுத்த எடுப்பிலேயே சாதனை செய்யாது, ஆனால் அதிலுள்ள தனிநபர் சிறந்து விளங்கும் ஒரு துடுப்பாட்ட அணியில் தன்னை இணைத்துக் கொண்டிருப்பின் சாதனை வீரனாக வரமுடியும், இதுவே மரபியல் தரும் நன்மை, ஆனாலும் துடுப்பாட்டம் வானத்தில் இருந்து வந்ததல்ல சில மனிதக்குள் இருக்கும் ஒருவர் பின்பலரால் கண்டு பிடிக்கப்பட்டு விளையாட்டாக்கப்பட்டது, அதாவது முற்றிலும் துடுப்பாட்டத்தை தெரியாத நிலையில் என்பது உண்மையே!

அதேபோல் கண்டுபிடிப்பு இலங்கையை சேர்ந்த ஒருவர் அமெரிக்கநாசவில் இணைந்து பெரிய கண்டுபிடிப்புக்களை செய்தால் அது அவருக்கு குழுநிலையால் அவருக்கு கிடைத்த நன்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல் பல்கலை கழகத்தில் புதுமுக மாணவர்களை ராக்கிங் செய்வ தானது, பல்கலைகழகம் என்ற பெரிய குழுவுக்குள் பற்பல குழுநிலை தன்மை யுடைவர்கள் சேரும்போது அவர்களை ஒரே குழுநிலைத் தன்மையை ஏற் படுத்தவே ராக்கில் செய்யப்படுகின்றது, அதவது எப்பேற்பட்ட கொம்பாக இருந்தாலும் பணிந்து வரவேண்டும் என்பதாலும் மற்றும் வெக்கதுக்கப்பட்டு தாழ்வு மனப்பாண்மையுடன் ஒதுங்குபர்களை தம்முடன் இணைத்துக் கொள்வ தும் குழுநிலை சிதறிவிடாமல் இருக்கவுமே ராக்கிங் ஆகும்.

இதேபோல் தொழில் ஸ்தணங்களில் எற்படும் அனுபவம், அதாவது பெரிய படிப்புமேதாவித்தனம் இல்லதவர்களும், அல்லது விவேகம் என்று சொல்க்கூடிய சுயசிந்தணை ஆற்றல் இல்ல விட்டாலும் அனுபவப் படிப்பு மரபுகளை இணங் கண்டு அதைதிரும்ப செய்யக் கூடிய ஆற்ற பெற்றால் ஒருவரை பதவி உயர்வு என்கின்ற அந்தஸ்துவரை அனுபவம் உயர்த்தி செல்லக் கூடும் இதை பட்டறிவு என்று சொல்லாம் ஆனால் அனுபவத்தினுடே கண்டுபடிப்பு அனுபவத்தின் பிரிதொரு நிலையாகும் இவ்வாறு அனுபவ வாயிலக பெறும் அறிவைவிட வெளி நிலையில் படித்து பட்டம் பெற்று ஒருவர் திடிரென பெரிய பதவிக்கு வந்தா லும் சிறிது காலம் அவர் பட்டறிவை நடவேண்டி யேற்படுவது குழுநிலை தன்மையே காரணமாகும்.

## குழு நிலை உரிமை போரட்டம்

அதாவது முன்னர் நாம் பார்கப்பட்ட குழுநிலை பல்வேறு நோக்கங்களுக்காக உருவாகின்ற போது ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதுபோல் எமது உரி மைநிமை நாட்ட குழுவாக செயல்படுகின்றோம் உ+ம் இலங்கை வாழ் தமிழர் கூழாம் ஒரு சிறுபாண்மை இனம் ஆக எம்மில் எல்லோரலும் தாய் மொழியை விட பிறமொழியை கற்றக் கொள்ள முடியாது அதைவிட எமது தாய் மொழி யுடாக கருமமாற்றும் போது அவை இலகுவாதைாகவும் விரைவில் அதில் அனுபவம் பெறக் கூடியதாகவும் இருக்கும் அத்துடன், அன்றாடக் கடை மைக்கு குறுக்கிடு இராது ஆக ஒருவருக் கொருவர் துணையாக இருந்தால் ஒன்றுபட்டு வாழமுடியும் தவிரவும் இவ்வாறு உரிமைக்காக போரடும் பல குழக்கள் உள்ளன, தொழிலாளர் சங்கங்கள் மாதர் சங்கங்கள், வேலை யற்றபட்டதாரிகள் சங்கம் இவ்வாறு பற்பல இருந்த போதும்.

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்
என்ற எண்ணம் இருக்கும் இளைஞர்களுடைய
உள்ளத்தில் எப்பொழுதும் எழுச்சியிருக்கவேண்டும்
வெற்றிப் பாதையில் முன்னேற விரும்பும் இளைஞர்கள்
எதிலும் மனநிறைவு கொள்ளமாட்டார்கள்.

வில்லியம் ஸ்ட்ராங்

கோணங்கித்தனமான உரிமை குரல்எழுப்பும் எத்தணையோ குழுக்கள் மேலை நாடுகளில் இருக்கின்றன என்பதை தினசரி பத்திரிகை வாயிலா அறிய முடியும் அதாவது ஆண்பாலியல் உறவாளர் சங்கம், விபச்சாரிகள். சங்கம் இவ்வாறு பற்பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழுவினர் மோதலும்
## அறிவியல் முரண்பாடும்

மனித இனம் தோன்றி குழுவாகச் செயல்பட காலம் தொட்டே பலவேறு தேவைகளால் போட்டியேற்பட குழுமோதலும் கூடவே தோன்றிவிட்டது. அதை சண்டித்தனம் என்று சொல்லலாம் இது குழுக்கள் பெரிய இனம் ஆகிவிட்ட நிலையிலும் எங்கள் இனத்தில் ஒருவனுக்கு யாராவது அடித்தாலும் அடீ மற்ற இனத்தவன் எங்கடை இனத்தவனுக்கு கைவைப்பதோ என்று தனிப்பட்ட சண்டைகள் கூட பெருத்து பெரும் இன மோதலாகவே வெடிப்பதுண்டு.

இவ்வாறு அவைஈடுபடும் குழுக்களைப்பொறுத்துஅமையும் உ.+ம் மொழிசண்டை சாதிச்சண்டை, சமயச்சண்டை ஊர்ச்சண்டை, விளையாட்டு போட்டிகளில் பாடகசலைச் சண்டை இவை வரையறுக்க முடியாத குழுக்களின் தேவைக்கனாமவாக இடம் பெறுவது தொடர்கதை

இவ்வாறு அறிவியலும் குழுநிலையில் வாதப் பிரதிவாதங்களுடையதாகவே இருக்கும் இதற்க்கு பெரிய பெரிய தத்துவங்களும் விதிவிலக்கல்ல, அது மனிதன் தான் சார்ந்து இருக்கின்ற குழுநிலையை நியாப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பான்.

## தலைமத்துவங்களும்
## குழுநிலைப் போட்டிகளும்

பெரும்பாலும் குழுநிலைவாதங்கள் தலைமைத்துவத்தைதக்கவைத்துக் கொள்ள ஏற்படும் பூச்செண்டு வேலையாகும், இது உள்ளும் புறமும் ஏற்படும், உள்ள எனப்படும் போது ஒரு குழுவில் வெவ்வேறு மொழி இனச்சாதிகளில் சாந்தவர்கள் ஈடுபடும்போது, இந்த நோய் உள்ளுக்குள் இருந்தே அறுக்கும் வெளி எனப்படும் போது மேலே நாய பார்க்ப்பட்ட குழுமோதாலகும்.

---

அசோக்:- பாவம் அந்த மெல்லிய மாப்பிளையின் தலையிலை இவ்வளவு பாரத்தைச் சுமத்தி விட்டாங்களே!

பீற்றர்:- காசு கொடுத்து எடுத்த மாப்பிளை காற்றுத்தூக்கிக் கொண்டு போகாமல் இருப்பதற்கு.

— பிரசாத்

---

இங்கே ஒரு சம்பவத்தை நோக்குவோம் பாகிஸ்தானில் இராணுவப்புரட்ச்சி, பிரதம மந்திரிக்கே தெரியாமல் இடம் பெற்ற இராணுவ எல்லை ஆக்கிரமிப்பால் இடம் பெற்றது பின்னர் பிரதமர் இராணுவத்தை வாபஸ் செய்ய அவரின் ஆளுமை வீழ்ச்சி கண்டதுடன் அவரின் இராஜதந்திரத்தை விட இராணுவ இராஜதந்திரமே வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இரத்தமில்ல புரட்ச்சியாதலால் அவ்வளவு மோசமில்லை, உலகில் இது போன்ற எத்தனை சதிகள்.

ஏன் ஒரு குழுக்களுக்கு யார்பெரியவன் என்ற போட்டியில் எற்படும் சதிகள் சம்பிரதாயம் ஆகிவிட்டது.

## குழுநிலை குழப்பமும் மாற்றம்

முன்னைய காலங்களில் தலைமைத்துவம் செல்வாக்கு மிக்கதாவும் சில வேளை அடக்கு முறையுள்ள தாகவும் திகழ்ந்தது அதாவது குடும்பத்தலை வனுக்கு மணைவி பிள்ளைகள் கட்டுப்பட்டார்கள், அதேபோல் குழுதலைவரின் சொல்லுக்கு குழுகட்டுப்பட்டது.

ஆனால் இன்று நிலமை தலைகீழ், பிள்ளைகளின் நன்மைக்கு சொன்னா லும் தந்தை சொல்கேட்பதில்லை தந்தையின் பாசத்தை பகடக்காயாக்கி தந்தையே பணம் சம்பதித்து தர அதையும் உணராமல் தந்தை வீட்டுவேலை செய்ய அதையே மேற்பார்வை செய்யும் பிள்ளைகள்.

இத்தகை, குடும்ப நிலைகாரணமாக, இத்தகைய அங்கத்தவர் குழுநிலைக்கு வரும் போது பிடிவாதக் காரரகவும், தாம் நினைத்தவற்றை மற்றவரை வேண்டும் விளையும் என்று சிந்திக்காமல் செயல்படுத்துவதும்.

மற்றும் ஒரு சிறு குழு தன்னை விட பெரிய குழுவை உள்வாங்கும் போது பழைய குழு புதிய குழுவுக்கு கீழ்படியவேண்டிய நிலை இதனால் மரபுசட்ட திட்டம் எடுப்பார் கைப்பிள்ளை ஆவதும் குழுநிலை குழப்பமாகும்

## குழுநிலை மறுப்பு:

வெள்ளையன் கறுப்பன், மேற்கத்தையன் கீழைதேசத்தவன், சிங்களவன் தழிழன், மாவட்ட வேறுபாடு, ஊர்வேறுபாடு, குறிச்சிவேறுபாடு உறவினரிடை யே கலப்புத்திருமணங்களால் வரும் புறக்கணிப்பு, குடும்பத்தில் நீ கொப்பரை ஆக்களை மாதிரிமற்றபகுதி கொம்மான்ரை ஆக்களை மாதியே இவ்வாறு மனிதரிடை காணப்படும் வேற்றுமை உணர்வு குழுநிலை மறுப்பிற்கு காரணமாகும்.

இவ்வாறன பிறிது வடிவங்களில் தொழில் ஸ்தானத்திலும் பிரதிபலிக்கும்.

## முடிவுரை

வாழ்க்கை சக்கரம் சுழல் வதற்க்கு முரபாண்டுகள் அவசியம் காரணம் உயராய்வு விசை இல்லத இடத்தில் சக்கரம் சுழலும் போது வளக்கல் ஏற்படும், இந்த வளக்கல் விரக்தி ஆக மாறதிருக்க முரன்பாடுகள் அவசியம், அதாவது வாழ்க்கை சக்கரம சுழல பிடிப்பிபு அவசியம் எனச் சுருங்க கூறலாம்.

இந்த வகையில் இந்த முரன்பாடுகளை எமது வாழ்வுக்கு சாதக மாக்கிக் கொள்ள குழுநிலை உதவுகின்றது. அதவது பிரச்சணைகளே வாழ்வின் ஆதாரங் களாய் மாறுகின்றது இதில் சட்டம், தலைமைத்துவம், எனப் பலவாறு விரிந்து செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் சூழ்நிலைகளால் உலகெங்கும் பிரச்சனைகள் இடம் பெறுகின்றன, ஆக உலகை ஒரே சூழ்நிலைக் கொண்டு வருவதாலே சூழ்நிலைப் பிரச்சனை தீர்ந்துவிடப்போவதில்லை மாறாக சூழ்நிலை ஏதோ ஒரு வகையில் பலவாக வடிவம் பெற்று விஸ்வரூபாம் எடுக்க தவறாது, இது உலக வரலாறு.

ஆகவே சூழ்நிலை பிரச்னைகளை வெற்றி கொள்ள புரிந்துணர்வு மனமாற்றம் விட்டுக் கொடுப்பு இவற்றுக்கு மேலாக அறிவியல் புரட்சி என்பன அவசியமாகின்றது.

★


# பராசக்தி ஐஸ்கிறீம்

★ ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
★ நட்ஸ் ஐஸ்கிறீம்
★ வனிலா ஐஸ்கிறீம்
★ சர்பத் மற்றும குளிர்பானங்கள்
★ புறுட்சலட் ஐஸ்கிறீம்
★ சொக்கலேட் ஐஸ்கிறீம்
★ ஜெலி ஐஸ்கிறீம்
★ கேக் வகைகள்

**குறித்த நேரத்தில் ஓடர் செய்து**
**பெற்றுக்கொள்ளவும்**
**சுவைத்து மகிழவும்**
**சுவையுடன் சுத்தத்தை நாடுவோர்**
★ **தவறாமல் நாடுவது** ★

**பராசக்தி ஐஸ்கிறீம்**
ஆடியபாதம் வீதி, கொக்குவில்.


## கலைகள்

படைப்புடன் சம்பந்தப்பட்டவை கலைகளாகும். அதாவது இறைவனின் படைப்பை கூறுபன மற்றும் படைப்பாளியின் படைப்பும் கலையாகும். தவிரவும் மதிதுட்பம் பொருந்திய நுன்அறிவும் கலையெனக் கொள்ளலாம் அவற்றுள் தெய்வீகம் சம்பத்தப்பட்டவை தெய்வீக் கலைகளாகும். மற்றும் மனித இனவாழ்வியலோடும் வரலாற்றோடும்பிறந்த பொழுது போக்கு அம்சங்களும் கலைகள் எனக் கொள்ளப்படுகின்றன.

ஆர். ஜெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துலகா்...

## அன்றும்.
## இன்றும்......
## என்றும்......?

89ம் ஆண்டு ஒக்ரோபர் நவம்பர் மாதங்களுக்கான தீபாவளி சிறப்பிதழாக வெளிவந்த உள்ளம் மலரில் எழுத்தாளர் 'வாகுலேயன்' வரைந்த ஒரு படைப் பாளியின் பார்வைப் பதிவுகள் பகுதியில் அவரது ஆரம்ப கால எழுத்து உலக வாழ்வின் நினைவுகளைத் தீட்டியிருந்தார். அதில் ஒரு சிறுபகுதி இங்கு மீள் பிரசுரமாகிறது.

எழுத்துலகில் பிரவேசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் இப்படியான அனுபவங்கள் கட்டாயம் கிடைக்குமோ? என்ற வினா என்மனதில் எழுகின்றது.

..........ஏதாவது எழுதவேண்டும் என்ற வெறி ஆரம்பித்தகாலம் ஏராளமாக எழுதி அவற்றில் தெரிவு செய்து பத்திரிகைகளுக்கு அனுப் பிவிட்டு இந்தவாரம் வரும் அடுத்தவாரம் வரும் என பழி கிடந்த பருவம்.

பதினைந்து வருடங்களுக்கு மேல் இருக்கும் என நினைக்கின்றேன் அனுப்பியவை எல்லாம் பிரசுரமாகவில்லை. கிணற்றிற் போட்ட கற்கள் போல பத்திரிகைக் காரியாலயங்களில் தங்கிவிட்டவை ஏரா ளம்

எதுசரி எது பிழை எழுதுபவை தகுதியானவையா? இல்லையா என்பது கூடத் தெரியாத நிலை.

குறிப்பிட்ட பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பிய கதை பற்றி விசா ரிக்க அந்தப் பத்திரிகைக் காரியாலயம் சென்றேன்.

சட்டென்று பத்திரிகையின் ஆசிரியரைச் சந்திக்க முடியவில்லை. கட்டைக்காற்சட்டை போட்ட பெடியனான என்னை வாசலில் நின்ற பாதுகாவலர் மதிக்கவில்லை. மரியாதையாக உரையாடக் கூட இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் நொந்தாலும் எப்படியோ அவரைச் சம்மதிக்க வைத்து ஆசிரியரைச் சந்தித்தேன். பலநிமிடங்கள் காத்திருப்பிற்குப் பின்னர் அந்த ஆசிரியர் என்னைக் காணவந்தார்.

மிகுந்த மரியாதையுடன் அவருடன் உரையாடினேன் கதை எப்போது அனுப்பியது? கதையின் பெயரென்ன? என்றெல்லாம் அவர் கேட்டார்.

நான் பதில் சொன்னேன்.

''கதையின் வேறுபிரதி உண்டா? என அவர் கேட்க.

''இருப்பதாக ஒத்துக் கொண்டேன்

''அப்ப அதைக் கொண்டுவாரும் போடலாம்'' என்றார் திடும் என மகிழ்ச்சி பற்றிக் கொண்டது அது ஒரு சிறு பொழுதுதான் என்னுள் நின்றது.

''பொக்கற்றுக்குள் சில்லறை இருக்கா?'

என்பது அவருடைய அடுத்த கேள்வி

பிறகு நீண்டகாலம் அந்தப் பத்திரிகைப் பக்கம் தலைவைத்துப் படுக்கவில்லை ஐந்து வருடங்களுக்குப் பின்னர் தான் மீண்டும் அந்தப் பத்திரிகையில் எனது படைப்புகள் பிரசுரமாயின

இன்று மீண்டும் அவரை தற்செயலாகச்சந்தித்தேன்.........

இன்றும் கூட இளம் எழுத்தாளர்களின் தகுதியான படைப்புகளுக்குத் தகுந்த இடம்கிடைப்பதில்லை ஆனால் காரணம் இலஞ்சம் அல்ல சற்றுவித்தியாமாக நிலமைமாறியுள்ளது.

ஆம் இன்று ஒருபடைப்பாளரின் படைப்புமுதலில் கன்னியாக வெளிவரவேண்டுமெனில் திறமையோ தகுதியான படைப்புகளோ அவசியமில்லை பத்திரிகை அல்லது சஞ்சிகைக் காரியாலயங்களில் ஆசிரியர் அல்லது அலுவலர் ஒருவர் உறவினராகவோ அல்லதுநல்ல அறிமுகமானவராகவோஇருந்தால் போதுமானது.

மறுப்பவர்கள் எவருமிருந்தால் அவர்கள் தங்கள் வெளியீடுகளில் தகுதியான படைப்புகளை வெளியிட்டு இளம் எழுத்தாளர் அல்லது எழுத்துலகில் பிரவேசிப்பவருக்கு தகுந்த களம் அமைத்துக் கொடுப்பார்களா?

எழுத்துலகில் அனுபவஸ்தர் பலர் இன்றில்லை புதியவர்களும் சிலர் இதற்குக் காரணம் எழுதிநிராகரிக்கப்பட்ட பலர்தாம் எழுதியது தகுதியல்ல எனநினைத்து எழுத்துலகில் இருந்து ஒதுங்கிவிட்டார்கள் ஒதுங்கி வருகிறார்கள்.

யதார்த்திகன்

---

மகன்:- அப்பா நீங்கள் சீதனம் டொனேஷன் என்றெல்லாம் கேட்பது சரியில்லை.

தந்தை:- சரி, நான் கேட்கவில்லை. நீ எழுதிய காதல் கடிதங்களுக்கு முத்திரைக் காசையாவது வாங்கித்தந்திடு. - பிரசாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைகள் - பாதீனியம்

## ஒரு கண்ணோட்டம்

பாதீனியம் ஓர் விஷக்களை. பாதீனியம் ஓர் கொடிய களை. பாதீனியம் பற்றி யாழ்குடாநாட்டில் கிட்டத்தட்ட எட்டு மாதங்களுக்கு முன்னர் மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் தாக்கம், விளைவுகள் பற்றி இப்போது யாழ்குடாநாட்டில் உள்ள பெரும்பாலான மக்கள் பத்திரிகை மூலமாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் அறிந்துள்ளனர். இங்குள்ள கிராமப் புறமக்கள் தொடக்கம் கல்விமான்கள் வரை பாதீனியம் பற்றி அறிந்துள்ளனர்.

பாதீனியம் குடும்பம்:- கொம்பசிற்றேயினுள் அடக்கப்படுகின்றது. மார்கழிச் செவ்வந்தி (*Chrysanthemum sp*) சீதேவியார் செங்கழுனீர் (*vernonia sp*) போன்ற தாவரங்களும் பாதீனியத்தின் உருவத்தை ஒத்தவையாக இருப்பதால் பெரும்பாலானோர் குழப்பமடைந்து *Chrysanthemum, vernonia* போன்றவற்றையே அழிக்கின்றனர் ஏனெனில் பாதீனியத்தின் இலையும் மார்கழிச் செவ்வந்தியின் இலையும் இளம்நாற்றில் ஒரேமாதிரி உள்ளது. சீதேவியார் செங்கழுனீரின் பூவும் பாதீனியத்தின் பூவும் ஒரேமாதிரியாக உள்ளன. இவையே மக்களின் குழப்பத்திற்குக் காரணமாகும். இதனை நிவர்த்தி செய்யவென அண்மையில் யாழ் இந்துக் கல்லூரியில் நிகழ்ந்தகண்காட்சியின் போது மேற்குறிப்பிட்ட மூன்று தாவரங்களும் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியற்துறையினர் சார்பாக வைக்கப்பட்டு இவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் தெளிவாக விளக்கப்பட்டன.

கே. சுகந்தன் B. Sc.

பாதீனியத்தின் குருத்து இலை சிறிய தனியான இலையாக இருக்கும் அதே வேளை மார்கழிச் செவ்வந்தியின் குருத்து இலை மூதிர்ந்த இலைபோல் வெட்டப்பட்ட ஒழுங்கமைப்பாகக் காணப்படும். அத்துடன் பாதீனியத்தின் தண்டு குறுக்குவெட்டுமுகத்தில் பல்கோண வடிவாகத்தென்படும். மார்கழிச் செவ்வந்தியின் தண்டு குறுக்குவெட்டுமுகத்தில் கிட்டத்தட்ட வட்டவடிவாகக் காணப்படும். பாதீனியத்தின் தண்டின் மேற்பரப்பில் புருவங்கள், வரியமைப்பு போன்றன காணப்படும். மார்கழிச்செவ்வந்தியில் இவ்வாறில்லை.




NEW LUCKSUMY TRADES & COMMUNICATION CENTRE

T. No:- 021-2829 *K. K. S. ROAD,*

I.D.D.:- 0094-21-2928 *KOKUVIL JUNCTION, KOKUVIL.*

பாதீனியத்தின் முதிர்ந்த இலை வெட்டுண்ட ஒழுங்கைக்காட்டும் அதேவேளை சீதேவியார் செங்கழுனீரின் முதிர்ந்த இலை தனியிலையாகக் காணப்படும்.

மனிதனுக்கு அத்தியாவசியமான இடங்களில் மிக அதிகளவில் பெருக்கமடைந்து மனிதனின் தொழிற்பாடுகளுக்குப் பல்வேறுபட்ட வழிகளில் இடையூறுகளை ஏற்படுத்தும் சிறிய தாவரங்கள் களைகள் எனப்படும். களைகளின் சிறப்பியல்புகள் பின்வருமாறு.

1) பொதுவாகப் பூண்டுகளாகக் காணப்படும்.
2) மிகக்குறுகிய கால வாழ்க்கை வட்டம் உடையவை.
3) மிகத்துரிதமாக வளர்ச்சியடையக் கூடியன.
4) பதியமுறை இனப்பெருக்கம் மூலம் மிக விரைவாக இனப்பெருக்கம் அடையும்.
5) கூடிய வினைத்திறனுடன் இலிங்கமுறை இனப்பெருக்கத்தினை மேற்கொள்வதால் மிக அதிகளவில் பழங்களையும் வித்துக்களையும் தோற்றுவிக்கும்.
6) பழங்களும் வித்துக்களும் கூடிய வினைத்திறனுடன் பரம்பல் அடையக் கூடிய இசைவாக்கங்களைக் கொண்டிருக்கும்.

   eg முக்குத்திப்பூண்டு (*Tridax sp*)
   எருக்கலை (*Calotropis sp*)

7) பரந்த வீச்சுடைய சூழல் நிபந்தனைகளிலும் தப்பி வாழக்கூடியதாகவும் வளர்ச்சியடையக் கூடியதாகவும் காணப்படும்.
8) ஏனைய பயிர்த்தாவரங்களுடன் வெற்றிகரமாகப் போட்டியிடும் ஆற்றலைக்கொண்டிருக்கும். ஒளி, வாழிடம், நீர், கனியுப்புப்போசணைப் பொருட்களுக்காகப் போட்டியிடும்.

களைகளால் நன்மைகளும் தீமைகளும் ஏற்படுகின்றன. நன்மைகளாவன,

a) மண்ணரிப்பையும் நீர் முறையரிப்பையும் தடுக்கும்.
b) மண்ணின் ஈரலிப்பைப் பேண உதவும்.
c) மண்ணுக்கு அதிகளவு சேதனப்பதார்த்தங்களைச் சேர்க்கும்.
d) சில களைகள் வளிமண்டல நைதரசனைப் பதிக்கும் eg/- *Mimosa pudica* (தொட்டால் சுருங்கி)
e) விலங்குகளுக்கு உணவாகப் பயன்படும். eg புல் இனங்கள்.
f) மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

   eg *Leucas* (முடிதும்பை)

g) அழகுக்காக வளர்க்கப்படும்.

   eg - *Elephantophus*

களைகளால் ஏற்படும் தீமைகளாவன,

a) பயிர்த்தாவரங்களுடன் நீர், கனியுப்பு, ஒளி, வாழிடம் போன்றவற்றிற்குப் போட்டி இடுவதால் பயிர்த்தாவரங்களின் விளைச்சல் குறையும்.
b) பயிர்த்தாவரங்களில் ஏற்படும் நோய்களுக்குப் பொறுப்பான நோய்க்காவிகளுக்கு தற்காலிக வாழிடமாகக் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

c) பயிர்த்தாவரங்களின் வளர்ச்சியைத்தடுக்கும் நஞ்சுப்பதார்த்தங்களைச் சுரந்து மண்ணில் விடும்.

d) நீர்க்கால்வாய்களையும் நீர்ப்பாசனத்தொகுதிகளையும் அடைக்கும்,
eg :- *Salvinia*

e) நீர் நிலைகளின் மேற்பரப்பை மூடி வளர்வதால் நீர் நிலைகளின் ஆழமான பகுதிகளில் வாழும் உயிரங்கிகளுக்கு ஒளி, $O_2$ செல்ல முடியாமல் இருக்கும்.
eg:- *Pistia, Salvinia*

g) மனிதனில் நோய்களைப் பரப்பும் காவிகளின் வாழிடமாக இருக்கும்,
eg :- நுளம்பு

h) வீட்டுத்தேவைகளுக்கு வினைத்திறனுடன் நீரைப்பாவிக்க இயலாது இருத்தல்.

i) குளங்களையும் அருவிகளையும் பயன்படுத்த முடியாமல் இருத்தல்.

j) சூழலியல் சமனிலையைக் குழப்பும்.

k) வயல் எலிகளின் மறைவிடமாகக் காணப்படும்.

## களைக்கட்டுப்பாடு

களைகள் அங்கிகளுக்கு நன்மையை விட அதிகளவு தீமையையே ஏற்படுத்துவதால் இவற்றைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும். களைக்கட்டுப்பாடு பல்வேறுபட்ட முறைகளால் மேற்கொள்ளப்படுகின்றது. அவையாவன.

பேரன்:- பாட்டி உங்கள் இறுதி ஆசை என்ன?
பாட்டி:- நோய் நொடியில்லாது ஸ்ரார் ரீ.வி பார்த்துக் கொண்டிக்கும் போது உயிர் பிரியவேண்டும் என்பது தான்!
- பிரசாத்

## 1) பௌதிகமுறைக் கட்டுப்பாடு

இதன்போது கையால் பிடுங்குதல், ஆழமாக உழுதல், நெருப்பு வைத்தல், நீரைத்தேக்கிக்கட்டல், சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை போன்றன மேற்கொள்ளப்படும். இம் முறைக்கட்டுப்பாட்டின் அனுகூலங்களாவன.

★ இலகுவான முறையாகும்.
★ நெருப்பு வைப்பதால் களைகளும் மண்ணினுள் காணப்படும் வித்துக்களும் கூட அழிக்கப்படும்.
★ மண் வளம் கூட்டப்படும்.
★ சூழல் மாசடைதல் தவிர்க்கப்படும்.

இம்முறைக்கட்டுப்பாட்டின் பிரதி கூலங்களாவன,

★ விளைவு பெற நீண்டகாலம் எடுக்கும்.
★ அதிகளவு வேலையாட்கள் தேவை.
★ கையால் பிடுங்கும் போது இளம் நாற்றுக்களையும் இளம் களைகளையும் வித்தியாசப்படுத்தல் கடினமாகும்.
★ களைகளை முற்றாக அழிக்க இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ நெருப்புவைப்பதால் பயன்தரும் அங்கிகளும் அழிவடைகின்றன. eg-மண்புழு, பீடைகளின் இயற்கை எதிரிகள்

## 2) இரசாயன முறைக்கட்டுப்பாடு

இதன் போது களைநாசினிகள் பாவிக்கப்படுகின்றன களைநாசினிகள் களைகளை இறக்கச் செய்கின்றன அல்லது அவற்றின் வளர்ச்சியைத் தடுக்கின்றன களைகொல்லிப் பாவனையானது ஏனைய களைக் கட்டுப்பாட்டு முறைகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டாலேயே அதிக வினைத்திறன் உடையதாகக் காணப்படும்.

---

புகைப்படப்பிடிப்பாளர்:- கஷ்டப்பட்டு உழைத்துப் போட்டால் இப்படியா சமைத்துப்போடுவது.

மனைவி:- புகைப்படம் புகைக்குள் நின்றா பிடிக்கிறியள்

- முரளி

---

களை நாசினிகளில்

1) சேதனக் களை நாசினி

a) சர்வகளை நாசினி eg பரக்குவாட்

b) தேர்வுக்குரிய களை நாசினி

அகன்ற இலைக்களை கொல்லி eg MCPA

ஒடுங்கிய இலைக்களை கொல்லி eg 2, 4, D

2) அசேதனக் களை கொல்லி eg sodium arsenite, sodium chlorate

என இரு வகைகள் உள்ளன.

களை கொல்லிகள் பாவிக்கப்படும் போது பின்வருவன கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

1) பொருத்தமற்ற களை கொல்லியைப் பாவிக்கக் கூடாது உதாரணமாக ஒருவயலில் அகன்ற இலைக்களைகளும் ஒடுங்கிய இலைக்களைகளும் காணப்படும் போது அகன்ற இலைக்களை கொல்லி பாவிக்கப்படின் ஒடுங்கிய இலைக்களை விரைவாகப் பெருகிவிடும்.

2) மிக அதிகளவில் பாவிக்கக் கூடாது

3) உகந்த நேரத்தில் பாவிக்க வேண்டும்.

இரசாயன முறைக் கட்டுப்பாட்டின் அனுகூலங்களாவன,

1) பிரயோகம் இலகுவானது.

2) வேலையாட்கள் அதிகம் தேவை இல்லை

3) களைகளையும் அவற்றின் இனப்பெருக்கக் கட்டமைப்புக்களையும் விரைவாக அழிக்கும்.

4) களைகள் மிகச் செறிவாகக் காணப்படின் குறைந்த செலவுடன் கட்டுப்படுத்தலாம்.

பிரதிகூலங்களாவன,

1) தொடர்ச்சியாகக் களை கொல்லிகளைப் பாவிப்பதால் களைகள் பெருகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) சூழல் மாசடையும்.
a) விசிறுபவர் பாதிக்கப்படலாம்.
b) நீர்வாழ் உயிரினங்கள், பறவைகள், விலங்குகள் பாதிக்கப்படும்.
c) நன்மையளிக்கும் உயிரினங்கள் பாதிப்படையும்.

### 3) உயிரியல் கட்டுப்பாடு:-

இங்கு களைகளைக் கட்டுப்படுத்தவென உயிரங்கிகள் பயன்படுத்தப்படு கின்றன.

eg a) இலங்கையில் பிரதான நீர்க்களையான *Salvinia* இனைக் கட்டுப் படுத்த *Cyrtobagous Salviniae* எனும் பூச்சி பயன்படுத்தப்பட்டது.

b) நீர்க்களைகளான *Hydrilla, Potamogeton, Chara,* போன்றவற்றைக் கட்டுப்படுத்த இவற்றை உணவாக்கும் *ChineseCarp Commoncarp, Silver Carp* போன்ற மீன் இனங்கள் பாவிக்கப்படுகின்றன

இம் முறைக்கட்டுப் பாட்டின் அனுகூலங்களாவன,

1) குறித்த களைக்குத் தனித்துவமானது.
2) சூழல் மாசடைதல் தவிர்க்கப்படும்.
3 ஆரம்பச் செலவு அதிகமாக இருந்தாலும் இறுதியில் செலவு குறைவு.

இம்முறைக்கட்டுப்பாட்டின் பிரதி கூலங்களாவன,

1) விளைவைப்பெற நீண்டகாலம் எடுக்கும்.
2) ஆரம்பச்செலவு அதிகம்.
3) பயன்படுத்தும் அங்கி பீடையாக மாறலாம்.
4) பயன்படுத்தும் அங்கி நோய்க்காவியாக மாறலாம்.

---

உள்ளத்தினை அலங்கரிக்கின்ற
படைப்புகளிற்குப் படைப்பாளர்களே பொறுப்பு

---

### 4) ஒருங்கிணைந்த களை முகாமைத்துவம்

களைகளைக் கையால் பிடுங்குவதாலும், நீர்முகாமைத்துவத்தாலும், உயிரின வியல் கட்டுப் பாட்டு முறையாலும் கட்டுப்படுத்த நீண்ட காலம் எடுக்கும். இரசாயனமுறைக் கட்டுப்பாட்டால் சூழல் மாசடையும். எனவே பல்வேறுபட்ட களைக் கட்டுப்பாட்டு முறைகளைக் கருத்திற் கொண்டு களைகளை இலகு வாகவும் விரைவாகவும் சூழல் மாசுபடாமலும் கட்டுப்படுத்தலே ஒருங்கிணைந்த களை முகாமைத்துவம் எனப்படும். இதன்போது கையால் பிடுங்குதல், நீர்முகா மைத்துவம், உயிரினவியல்கட்டுப்பாடு, களைகொல்லிகளைப் பாவித்தல் போன்ற பல்வேறுபட்டமுறைகள் ஒருமித்துப் பாவிக்கப்படுகின்றன. எனினும் களைகளைக் கட்டுப்படுத்தும் போது அவற்றை முற்றாகக் கட்டுப்படுத்தலும் விரும்பப்படுவ தில்லை. ஏனெனில் அவ்விடத்தில் வேறு புதியதொரு களை பிரவேசிக்குமாயின் அது அங்கு மிக விரைவாகப் பல்கிப்பெருகி பாரதூரமான விளைவுகளை ஏற் படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதீனியம் பற்றிய சில ஆராட்சிகள் யாழ் பல்கலைக்கழகத்தில் மேற்கொள் ளப்பட்டன. மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதீனியம் எங்கு, எத்தளவில் பரந்துள்ளது என்பது பற்றிய ஆய்வு ஒன்று யாழ் பல்கலைக்கழக தாவரவியற் துறையைச் சேர்ந்த சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி.ஜெ. நந்தகுமார் அவர் களின் வழிகாட்டலில்கட்டுரையாளரால் மேற்கொள்ளப்பட்டு ஆய்வுக்கட்டுரையா னது அண்மையில் நிகழ்ந்த யாழ விஞ்ஞான சங்கத்தின் ஒன்பதாவது வருடாந்த செயலமர்வின் போது வெளியிடப்பட்டது. பாதீனியத்தின் ஒரு பூத்துணரில் சராசரியாக எத்தனை விதைகள் உண்டாகின்றன என்பதில் ஆராட்சியாளர்களிடையே ஒன்றுக்கொன்று முரணான கருத்துகள் நிலவுகின்றன. இதனைத் திட்டவட்டமாக அறிவதற்கென மற்றொரு ஆய்வு நுணுக்குக்காட்டி களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒரு பூந்துணரில 80-82 பழங்கள் இருப்பது அறியப்பட்டுள்ளது. ஒரு முதிர்ச்சியடைந்த பாதீனி யம் மரத்தில் 600-620 பூந்துணர்கள் உள்ளன. எனவே ஒரு மரத்தில சராசரி யாக 48000-50840 விதைகள் நான்கு மாதத்தினுள் உண்டாகின்றன.

---

ஓரினம் ஒரு தடவை தனது மொழியை
இழந்துவிட்டால் பிறகு உலகம் அழியும்வரை
அந்தகைய மொழியை அது திரும்பவும் பெறாது
பேரறிஞர் அண்ணா

---

பாதீனியத்தின் வேரால் சுரக்கப்படும் சில சுரப்புக்களால் ஏனைய தாவரங் களின் வளர்ச்சியும் பெருக்கமும் பாதிக்கப்படும் என பலர் கூறியுள்ளனர். இது உண்மைதானா?. என்பதையும் அறியும் நோக்குடன். தாவரவியற்துறையி னர் மேற்கொண்ட ஆய்வின்படி உண்மைதான் என உறுதிப்படுத்தப்பட்டு ள்ளது.

இதுபற்றிய மேலதிக விபரங்களும் அடுத்த இதழில் தரப்படும். பாதீனியத் தின் பூந்துணரில் ஆண்பூக்கள் உண்டு என சில நூல்கள் கூறுகின்றன. ஆனால் தாவரவியல் துறையினரின் ஆய்வுகளின் படி அதில்ஆண்பூக்கள் தனியாக இல்லை குழாய்ச்சிறு பூ (இரு பாற் பூ) வட்டத் தட்டுச்சிறு பூ (பெண் பூ) இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

---

சுறுசுறுப்பைப் போன்ற உற்ற தோழன் கிடையாது.
அதை வளர்த்துக்கொண்டால் உன்னை என்றும் கைவிடாது.

---

பாதீனியத்தைத் தொட்டால் சுணைக்கும், எரியும், மகரந்தங்கள் சுவாசத் தொகுதியினுள் சென்றால் சுவாச நோய்கள் ஏற்படும் என்பதைப்பலர் அறிந் துள்ளனர். ஆனால் இதை நம்புவதாகத் தெரியவில்லை. யாழ் — பல்கலைக் கழகத்தில் மேற்கொண்ட ஆய்வுகளில் இத்தகைய அறிகுறிகள் உணரப்பட்டுள் ளன. அனுபவித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு கூடத்தில் வேலை செய்தவர்களில் ஒருவர் கையுறைகளைப் பாவிக்காது தனது பாதீனியம் சம்பந்தமான வேலைகளைச் செய்தபோது இதன் பிரச்சனைகளைப் பற்றி எச்சரிக்கப்பட்டும் கூட அவர்'' அது ஒண்டும் செய்யாது எல்லா இடமும் இருக்கிறது தானே'' என்றார். வேலை தொடங்கி 30 நிமிடங்களில் ஆளையே காணவில்லை. தேடிப் பார்த்தபோது சவர்க்காரம், அல்கஹோல் கொண்டுகைகளைக் கழுவுவதில் மும்முரமாகஈடுபட்டிருந்தார். பின் ஏன்என வினாவிய போது ''கை கடிப்பது, எரிவது போல இருக்கிறது'' என்றார் மூக்குக்கு துணி கட்டாமல் பரிசோதனை மேற்கொண்டவரும் சுவாசிக்கக் கஷ்டப்பட்டது அறியப்பட்டுள்ளது.

இவையெல்லாம் உண்மையான விடயங்களாகும். மேலும் ஒவ்வொருவரின் உடலிலும் நோய்க்கான எதிர்ப்புசக்தி வித்தியாசமாக இருக்கும் சிலருக்கு சுணைக்கும், எரியும், தொய்வுநோய் ஏற்படும். சிலருக்கு ஏற்படாது. எதற்கும் நாம் எச்சரிக்கையாக இருப்பது நல்லதல்லவா?

பல்கலைக்கழகத்தில் ஆராட்சிகளை மேற்கொள்வோர்கள் பாதீனியம் மாதிரியைச் சேகரிக்கவென சென்ற பல்வேறுபட்ட இடங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு (சங்கானை கோண்டாவில், மருதனாமடம், புத்தூர், மல்லாகம்) உண்மையிலே பாதீனியத்தைத் தெரியாது.

பாதீனியத்தைப் பிடுங்கும்போது ''என்ன பூமரம் தம்பி இது'' என்ற கேட்ட விவசாயிகள் பலர் உள்ளனர் அதற்கு இதுதான் பாதீனியம் என்று கூறிய போது ''அட இது எனது தோட்டத்தில் அதிகளவில் உள்ளது ஆட்டுக்குப் போடுகின்றோம்'' என பல விவசாயிகள் கூறியுள்ளனர். ஆட்டுக்குப் போடுவதால் ஆட்டுக்கு நோய் ஏற்படும், பிடுங்குபவர் பாதிக்கப்படுவார், ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போகும் போது பரம்பல் நிகழும், ஆட்டின் எச்சத்தால் பரம்பல் நிகழும் என பல்வேறுபட்ட விடயங்கள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. வலிகாமம் பகுதியில் இது இப்போது நன்கு பரவிவருகிறது. விவசாயிகள், பொதுமக்கள், பொது அமைப்புகள் உடன் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

உண்மை நண்பர்களின் உறவே மிக்க உயர்ந்த அறிவு.
அதன் ஆதரவு இல்லாதவன் வெகு விரைவில் தன்னிலை
தவறி எதிரியின் பிடியில் வீழ்ந்து விடுவான்

---

இது இவ்வாறிருக்க, வடமராட்சிக்குப் போனசமயம் போகும் வழியில் பல பொதுமக்கள் மண்வெட்டியும் மண்எண்ணையும் தீப்பெட்டியுமாகத் திரிந்து பாதீனியத்தைப் பிடுங்கி எரிப்பதையும் காணமுடிந்தது. எனவே விவசாயிகள் நினைத்தால் மட்டுமே பாதீனியத்தை அழிக்கலாம். நினைப்பது எப்போது?

யாழ குடா நாட்டில் நான் அறிந்தவரை கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு முன்பிருந்து இன்றுவரை பாதீனியத்தைக் காணமுடிகின்றது. ஆனால் ஒரளவு கட்டுப் படுத்தப் படுகின்றது. ஆனால் சிலஇடங்களில் இன்னும் கட்டுப்படுத்தப்படாமல் உள்ளது. எனினும் பாதீனியத்தைக் கட்டுப்படுத்துபவர்கள் பலதவறுகளை விட்டுச் செல்வது நேரடியாக அவதானிக்க முடிகின்றது. அவையாவன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பாதீனியத்தை பிடுங்கி எரிக்காமல் குவித்து வைத்துள்ளனர்.:- இது வித்துக்கள் நீராலும் காற்றலும் பரம்பலடைய வழிவகுக்கும்.

2) ஒரு இடத்தில் கிட்டத்தட்ட 50 பாதீனியச் செடிகள் இருப்பின் அவற்றுள் 45 செடிகளை பிடுங்கி விட்டு 5 செடிகளை விட்டுவிட்டுச் செல்கிறாகள். இதற்கு ஓர் நல்ல உதாரணம் உள்ளது. என்னவெனில் சங்கானை நகரப் பகுதியில் கடைகள் அமைக்கவென அத்திவாரம் போடப்பட்ட காணியொன்றினுள்ளும் இதற்கு எதிரே உள்ள வயல்கரையிலும் மிக அதிகளவு பாதீனியம் காணப்பட்டது. பாதீனியம் கட்டுப்படுத்தப்பட்ட அடுத்த தினம் பார்த்தபோது வயல் கரைகளிலும், அத்திவாரக்காணியினுள்ளும் சிலசெடிகளைக் காணமுடிந்தது. பிடுங்கிய பாதீனியத்தை வீதியோரத்தில் எரிக்காமல் கவனமாக குவித்து வைத்துள்ளனர்.

3) பாதீனியத்திற்கு மருந்து அடிக்கும் போது கலவை போதாமல் இருத்தல்:- இதற்கும் ஓர் உதாரணம் உண்டு. கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்கு அண்மையில் உள்ள காணியொன்றினுள் பாதீனியம் சேகரிக்கச்சென்ற சமயம் காணிக்காரன் ''தம்பி நேற்றுத்தான் மருந்து அடித்தார்கள்'' என்றார். ஆனால் அவை மறுநாளும் பச்சைப் பசேலெனத்தோற்றமளித்தன,

எது எப்படி இருந்தாலும் பாதீனியம் தன்பாட்டில் பெருகிக்கொண்டே போகின்றது. விவசாயிகளும் தமது பாட்டில் பயிர்ச்செய்கை செய்து கொண்டே போகின்றனர்.

யாழ் விவசாயிகளுக்கு பாதீனியத்தைத் தெரியுமோ தெரியாதோ முக்கியவிடமல்ல. பாதீனியத்தைப் பற்றியாவது அறிந்துள்ளார்கள். ஆனால் வன்னிப் பகுதி விவசாயிகளுக்கு பாதீனியத்தைப் பற்றி யார் சொல்கின்றார்கள்? இது தான் பாதீனியம் என்று யார் காட்டுவார்கள்? இது மனவேதனைக்குரிய விடயமாகும்.

பாதீனியம் உருவவியல் பற்றிய சந்தேகங்களுக்கு, தாவரவியல் துறை யாழ் பல்கலைக்கழகம் விவசாயத்துறை / விவசாய மன்றத்தை அணுகவும்.

முடிவாகப் பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த களை முகாமைத்துவமே சிறந்தது இதை முன்னெடுப்பவர்கள் யார்? பொறுத்திருந்து பார்ப்போம்.

---

உள்ளம பற்றிய உங்கள் கருத்துக்களையும் வரப்போகும் உள்ளம் மலர்களுக்கான புதிய ஆக்கங்களையும் வாசகர்களாகிய உங்களிடம் இருந்து எதிர்பார்த்து நிற்கின்றனர் உள்ளம் ஆசிரியர் குழுவினர்.

தரமானவை எனின் புதியவர்க்கும் களம் அமைத்துக்கொடுக்க உள்ளம் என்றும் பின்னிற்பதில்லை.

உங்கள் கருத்துக்கள் மற்றும் ஆக்கங்களை எமது அலுவலக முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நன்றி

ஆசிரியர்குழு, (உள்ளம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாலட்சுமி
## சைவ உணவகம்

சுவை, சுத்தம், சுகாதாரமான சைவஉணவு வகைகளை மக்கள்
அன்றும் இன்றும் என்றுமே நாடுவது, நாடப்போவது
மகாலட்சுமி சைவ உணவகம்
மக்கள் தரும் மனமுவந்த ஆதரவில்
தன்னிகரற்று நிமிர்ந்து நிற்கும்
ஒரே உணவகம்

மகாலட்சுமி,
சைவ உணவகம்

கே. கே. ஸ். வீதி
கொக்குவில் சந்தி
கொக்குவில்

# I T N வீடியோ ஓடியோ
# &
# கொம்யூனிக்கேசன்

தமிழ், ஆங்கில, திரைப்பட
பிரதிகளும், CDடிஸ்க்களும்
வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்

27 கோயில் வீதி
கொக்குவில். கிழக்கு
கொக்குவில்

305, பலாலி வீதி
பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி

**TP. 021-3123 Fax. 021-3123**



*இச்சஞ்சிகை கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினரால் கொக்குவில் உள்ள அபிராமி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. 15.04.2001*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம்

உள்ளம்

உள்ளம்

உள்ளம்

உள்ளம்

உள்ளம்

உள்ளம்

உள்ளம்

உள்ளம்

உள்ளம்

உள்ளம்

உள்ளம்

அலுவலக முகவரி:-
உள்ளம்
வளர்மதி முன்னேற்றக்கழகமும் சனசமூகநிலையமும்,
செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

Cover Design & Graphics:- R.M
Cover Printed :-Pillaiyar Printers , Nallur

உள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org